விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 11 சனிக்கிழமை (25.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

## ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்



23

## பயண தடைக்கான உத்தரவை நீக்குக

### ராஜதந்திரிகளிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பா 23

### பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு

## அனைத்து தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும்

### நளின் பண்டார கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒரு புறம் தள்ளிவிட்டு அனைத்து தலைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கோரிக்கை விடுத்துள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து 23

## எதிர்க்கட்சி மீது குற்றம் சுமத்தாமல் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப

# அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை



**(கொழும்பு) எதிர்க்கட்சி மீது குற்றம் சுமத்திக்கொண்டிருக்காமல் விழுந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.** (23-ம் பக்கம் பார்க்க...)

## அவசரகால சட்டம் பாராளுமன்றில் நிறைவேறியது

### கூட்டமைப்பு எதிர்ப்பு

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை அடுத்த மாதம் வரை நீடிப்பதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பு 15 24

## தாக்குதலுடன் தொடர்புடைய

### 41 வங்கி கணக்குகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் 41 வங்கி கணக்கு 24

## கொழும்பிலிருந்து வெளியேற்றப்படும் 50ஆயிரம் குடும்பம்

(கொழும்பு)

கொழும்பில் வாழும் 50 ஆயிரம் குடும்பங்களை வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பு நகரில் குறைந்த வருமானம் பெறும் குடும் 23

## பிரச்சினைகளை தீர்ப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பு - சஜித்

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இது ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

83ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தை போன்று சில அரசியல் குழுக்கள் நாட்டுக்கு தீ வைத்து 24

## ஆவா குழு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

### சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கில் ஆவா குழு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு, அங்கு அமைதி நிலவுவதாக விடைபெற்றுச் செல்லும் வட மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்த அவர் தென் மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்று 24

### வித்தியா படுகொலை வழக்கு

## பொலிஸ்மா அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனு 24

### யாழில் 25 ஆயிரம் பேருக்கு

## காணிகள் இருந்தும் வீடுகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 25ஆயிரத்து 761 பேருக்கு காணிகள் இருந்தும் இதுவரை வீடுகள் 24

## புனர்வாழ்வு பெற்ற போராளிகள் குற்றங்களில் ஈடுபடமாட்டார்கள்

### புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் குற்றச் செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகள் தான் வவுணதீவில் பொலிஸாரைக் கொலை செய்தனர் என கூறப்பட்டது.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என தெரிய வந்திருக்கின்றது. புனர்வாழ்வு பெற்றவர்கள் அவ்வாறான செய 24

## பலாலி விமான நிலையம் நவீனமயமாக்கப்படும்

### அமைச்சர் அசோக அபேசிங்க

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையம் நவீனமயமாக்கப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அளவில் அங்கு நிவாரண விலையில் விமான சேவை வசதிகளைப் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணவர்களின் வருகையை அரசியலுக்கு பயன்படுத்துகின்றனர்

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்

எதிர்க்கட்சியின் சில அரசியல் வாதிகளின் பொய்ப் பிரசாரம் காரணமாகவே பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை குறைவடைந்திருந்தன. மாணவர்களின் வருகை அதிகரிக்கும்போது அதனை தனது அரசியலுக்கு பயன்படுத்திக்கொள்ள சிலர் பாடசாலைகளுக்கு சென்றிருந்தனர் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாதிகளின் நோக்கம் நாட்டில் சிங்கள முஸ்லிம் பிரச்சினை ஒன்றை ஏற்படுத்தி நாட்டை இஸ்திரமற்ற நிலைக்கு கொண்டுசெல்வதாக இருக்கலாம். இதன் மூலம் மீண்டும் 83 கறுப்பு ஜூலை ஒன்றே ஏற்பட்டிருக்கும். கறுப்பு ஜூலையின்போதும் பயங்கரவாதிகளுடன் அதிகமானவர்கள் இருக்கவில்லை. எதிராகவே செயற்பட்டனர். ஆனால் நாங்கள் முறைகேடாக செயற்பட்டால் அது வேறு திசைக்கு மாறி, பாரிய நிலைக்கு சென்றது. இந்த சம்பவத்திலும் அவ்வாறான நிலைக்கு செல்ல முடியாமல் அரசாங்கத்துக்கும் பாதுகாப்பு பிரிவுக்கும் தடுக்க முடியுமாகியுள்ளது.

என்றாலும் அரசியல்வாதிகள் மேற்கொண்ட பொய்ப் பிரசாரம் காரணமாக கடந்த 13ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் பல பிரதேசங்களில் பயங்கரவாத செயல் இடம்பெற்றது. என்றாலும் பாதுகாப்புப் பிரிவு இதனை கட்டுப்படுத்தியதால் நாடுபூராகவும் இது பரவாமல் தடுக்க முடியுமாகியது. எதிர்க்கட்சியில் இருக்கும் சில அடிப்படைவாத பயங்கரவாதிகளே இதன் பின்னணியில் இருக்கின்றனர் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,

## வெளிவாரிப் பரீட்சைகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற வெளிவாரிப் பரீட்சைகள் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் காலம் | அனுமதி அட்டை விநியோகம் |
|---|---|---|
| வணிகத்தில் முதலாம் தேர்வு - 2016 இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை | 08.06.2019 - 23.06.2019 | 03.06.2019 - 07.06.2019 |
| வணிகத்தில் மூன்றாம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) | 10.06.2019 - 17.06.2019 | 04.06.2019 - 07.06.2019 |
| வணிகத்தில் நான்காம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) | 18.06.2019 - 25.06.2019 | |
| வணிகமாணி - பகுதி - II - 2016 (பழைய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) | 10.06.2019 - 17.06.2019 | |
| வணிகமாணி - பகுதி - III - 2016 (பழைய பாடத்திட்டம்) | 18.06.2019- 25.06.2019 | |

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ள முடியும்.

பதிவாளர்
25.05.2019

(C-6474)

# 4 இலட்சம் பேருக்கு சமுர்த்தி அட்டைகள்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

அரசாங்கம் இரகசியமாக நான்கரை இலட்சம் பேருக்கு சமுர்த்தி நிவாரண அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதனை மேற்கொள்வதற்காக ஆயிரத்து 800 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன் வைத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்

அரசாங்கம் எதிர்வரும் 31ஆம் திகதி நான்கரை இலட்சம் பேருக்கு சமுர்த்தி நிவாரண அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுத் திருக்கின்றது. இதில்பாரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கினது. உண்மையாக சமுர்த்தி உதவி பெற தகுதியுடையவர்களுக்கு இது வழங்கப்படுவதாக இருந்தால் அதில் பிரச்சினை இல்லை. மாறாக ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவையானவர்களுக்கு மாத்திரம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது எனவும் இதன்போது சுட்டிக் காட்டினார். (ம-3)


## நல்லூர் பாம் சென்ரர்

உள்ளூரில் வழங்கப்பட்ட புறொயிலர், கல்பேட் கோழி இறைச்சிகள் விற்பனைக்கு உண்டு.

◈ அல்ஷேஷ்யன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (8921)

19, முருகேசர் லேன், நல்லூர்.


## தவறி விட்டது

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த துரைராஜா தேவராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை (955245025 34V) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும்தொலைபேசிஎண்ணிற்குதொடர்பு கொள்ளவும்.சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0779354823

# பிரதேச வைத்தியசாலை - வரணி நோயாளர் நலன்புரிசங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்

## புதிய நிர்வாகத் தெரிவும் 2019

காலம் :- 09.06.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- முற்பகல் 10.00 மணி
இடம் :- வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு

1 அங்கத்தவர்கள் மட்டும் கூட்டத்தில் பங்கேற்க முடியும்.
2. பிரேரணைகள் 02.06.2019ற்கு முன்னர் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
3. புதிய அங்கத்தவராக சேர விரும்புபவர்கள் அங்கத்துவப் படிவத்தை நிரப்பி செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
(I) ஆயுட் சந்தா - 1000.00 ரூபா
(II) ஆண்டுச்சந்தா - 200.00 ரூபா

குறிப்பு: ஆண்டு சந்தா அங்கத்தவர்கள் அனைவரும் 2019ஆம் ஆண்டுக்கான சந்தா பணத்தை 31.05.2019ற்கு முன்னர் பொருளாளரிடம் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

நன்றி

செயலாளர்,
நோயாளர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச வைத்தியசாலை,
வரணி.
20.05.2019

(C-6473)

# மரண அறிவித்தல்



## திருமதி கமலாதேவி சிவஞானசுந்தரம்

பிறப்பு: 25.01.1943 இறப்பு: 22.05.2019

யாழ்.இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சிவஞானசுந்தரம் அவர்கள் கடந்த (22.05.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (ஓய்வுநிலை தபால் அதிபர்) - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவஞானசுந்தரத்தின் (ஓய்வுநிலை தபால் அதிபர் - ஒட்டுசுட்டான்) அன்பு மனைவியும் கமலினி (கனடா), குமுதினி (சுவிஸ்), சிவஞானரூபன் (கனடா), சிவாஜினி (முகாமைத்துவ உதவியாளர் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா), சுதாஜினி (கனடா), கமலரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகேசமூர்த்தி (கனடா), தர்மராஜா (சுவிஸ்), தெய்வமணி (கனடா), கெங்காதரம் (முகாமைத்துவ உதவியாளர் - கட்டடங்கள் திணைக்களம், வவுனியா), செல்வராசா (கனடா), வித்தியானி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவபாக்கியம் (ஒட்டுசுட்டான்), நல்லதம்பி (கனடா), கதிர்காமு (இடைக்காடு), வேலாயுதபிள்ளை (சிவம் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம், திருநாவுக்கரசு, சரஸ்வதி, பொன்னுத்துரை, சிவப்பிரகாசம், கெங்காதேவி, பரமேஸ்வரி, சிவச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகேஸ், நீவிகா (கனடா), சவிசா (கனடா) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் நிருசன் (கனடா), துஷாந், துஷானிகா (சுவிஸ்), நிலக்ஷன், டினோஜ்சன் (வவுனியா), மித்ரா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10 மணியளவில் புதுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6475)

தொடர்புகளுக்கு:
சிவஞானசுந்தரம் - கணவர் 077 1179973
சிவாஜினி - மகள் 077 635 4340
சிவஞானரூபன் - மகன் +14162866567
கமலரூபன் - மகன் +14164640282
தகவல்:- குடும்பத்தினர்

### இனப்பிரச்சினை தீர்வு தள்ளிவைப்பு

# அவசரகாலச் சட்டம் இனியும் நீடித்தால் தமிழரின் பூர்வீகம் இராணுவ வசமாகும்



## மாவை எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

**அவசரகாலச் சட்டம் இனியும் நீடித்தால் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்திற்கு சொந்தமாகும் நிலை ஏற்படும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா எச்சரித்தார்.**

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

"ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக அவ்வமைப்பை அழித்தொழிக்கும் நோக்கில் இப்பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால், இதனைப் பயன்படுத்தி முஸ்லிம், சிங்கள மக்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தைவிட, வடக்கிற்கே அதிக நெருக்கடி கொடுக்கப்படுகிறது. எனவே, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜனாதிபதி ஆராய வேண்டும். இதற்குப் புதிய விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் அவசியம்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பதால் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவது தள்ளிவைக்கப்படுகிறது. எமது நிலம் இராணுவத்திற்கு சொந்தமாகும் நிலை ஏற்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஞானசார தேரர் விடுதலை அரசுக்கு சிவசேனை பாராட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு அண்மையில் வந்தேறிய சமயங்களான கிறித்தவம், முகமதியம் இரண்டும் இலங்கையின் நெடுங்கால பாரம்பரியத்தைப் பேணுகின்ற சமயங்களான புத்தத்தையும் சைவத்தையும் தாக்கி மதமாற்றும் நோக்கம் கொண்டிருப்பன.

வந்தேறிச் சமயங்களான கிறித்தவம், முகமதியம் இரண்டிலிருந்து புத்த தேசியத்தை காக்க வேண்டும் என்ற முனைப்போடு செயற்பட்டவர் வணக்கத்துக்குரிய ஞானசார தேரர் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

நோக்கத்தில் தூய்மையாகச் செயற்பட்ட அப்பெருமகனார் சினந்து சொன்ன சொற்கள் இலங்கையின் சட்டங்களுக்குப் புறம்பானதென நீதிமன்றம் கண்டறிந்ததால் அவர் சில காலம் சிறையில் இருக்க நேரிட்டது. ஆனால் அவர் இப்போது வெளியே வந்திருக்கிறார். மீண்டும் தன் பணியைத் தொடர்கிறார் என்பதில் சைவர்களாகிய நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாக வண.ஞானசார தேரரை மன்னித்து விடுவித்த அரசுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொதுபல சேனையும் அதன் தலைவர் வண.ஞானசார தேரரும் அவரோடு இணைந்து கைகோர்த்துப் பணிபுரிகின்ற இலட்சக்கணக்கானோரும் இந்த மண்ணின் மரபைக் காப்பதற்கு முயற்சி செய்கின்ற மாபெரும் தொண்டர்கள். சைவ சமயத்தை வந்தேறிச் சமயங்கள் அழிப்பதில் இருந்து காக்கப் பொதுபல சேனை சைவர்களுக்குத் துணை நிற்கும் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### றிசாத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும்

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து ஆளும் தரப்பு உறுப்பினர் திடீர் விலகல்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதக் குண்டுத்தாக்குதல் தொடர்பாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆராயவும் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன விலகினார்.

இது தொடர்பான விலகல் கடிதத்தை அவர் நேற்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளித்தார்.



இந்நிலையில் அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவில் இணைக்கப்பட்டனர்.

கடந்த நாடாளுமன்ற அமர்வில் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஆசு மாரசிங்க, கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்ன, காவிந்த ஜெயவர்த்தன, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அடங்கிய விசேட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாழ்.மாவட்டத்தில் வரட்சியால் 49 ஆயிரத்து 381 பேர் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று மாதத்துக்குள் வரட்சியால் 14 ஆயிரத்து 809 குடும்பங்களைச்சேர்ந்த 49 ஆயிரத்து 381 பேர் பாதிக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகப்பிரிவுகளில் எட்டு பிரதேச செயலகப் பிரிவுகளிலே இப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கான நீர் விநியோகத்தை அனர்த்த முகாமைத்துவ நிலையம், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, பிதேசசபை ஆகியன மேற்கொண்டு வருகின்றன.

இதனடிப்படையில் நெடுந்தீவில் 1031 குடும்பங்களும் வேலணையில் 2 ஆயிரத்து 798 குடும்பங்களும் புங்குடுதீவில் 2 ஆயிரத்து 422 குடும்பங்களும் காரைநகரில் 2 ஆயிரத்து 760 குடும்பங்களும் சண்டிலிப்பாயில் ஆயிரத்து 41 குடும்பங்களும் சாவகச்சேரியில் 3 ஆயிரத்து 361 குடும்பங்களும் கரவெட்டியில் 336 குடும்பங்களும் மருதங்கேணியில் ஆயிரத்து 60 குடும்பங்களும் வரட்சியால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப்பெண் மரணம்

வீதியை மஞ்சள் கோட்டினூடாக கடக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியதில் மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கோப்பாய் தெற்கு மாதா கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றது. மஞ்சள் கோட்டினூடாக வீதியைக் கடக்க முற்பட்ட அறுபது வயது வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-10)

## ஞானசார தேரர் - ஜனாதிபதி சந்திப்பு



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், ஞானசார தேரரின் தாயும் கலந்துகொண்டிருந்ததோடு, பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்காக, ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர். (இ-7)

# பாகிஸ்தான் அதிர்ச்சி தோல்வி


அரைச்சதமடித்த ஆப்கானின் ஹஸ்மதுல்லா ஷஹிதி

உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சி போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி, 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது.

இங்கிலாந்தில், ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 30ஆம் திகதி தொடங்குகிறது. இதில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. தற்போது பயிற்சி ஆட்டங்கள் நடக்கின்றன. பிரிஸ்டலில் நடந்த பயிற்சி போட்டியில்பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் 'துடுப்பாட்டம்' செய்த பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக் (32), பகார் ஜமான் (19) ஜோடி சுமாரான ஆரம்பம் தந்தது. ஹாரிஸ் சொகைல் (1), மொஹமட் ஹபீஸ் (12), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (13) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அபாரமாக ஆடிய பாபர் அஸம் (112) சதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய சோயப் மலிக் (44) கைகொடுத்தார்.


பாகிஸ்தான் அணி 47.5 ஓவரில், 262 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பில்மொஹமட்நபி3விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஹஜ்ரதுல்லா ஜஜாய் (49) நல்ல ஆரம்பம் கொடுத்தார். மொஹமட் ஷஜாத் (23) 'ரிட்டயர்ட் ஹேர்ட்' ஆனார். ரஹ்மத் ஷா (32), சமியுல்லா ஷின்வாரி (22), மொஹமட் நபி (34) ஓரளவு கைகொடுத்தனர். பொறுப்பாக ஆடிய ஹஷ்மதுல்லா ஷஹிதி அரைச் சதம் கடந்தார்.

ஆப்கானிஸ்தான் அணி 49.4 ஓவர்களில், 7 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹஷ்மதுல்லா (74), ரஷிட் கான் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# தென்னாபிரிக்கா வெற்றி


அரைச்சதமடித்த தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி

கார்டிப் நகரில் நடந்த மற்றொரு பயிற்சி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் மோதின.


நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதலில் 'துடுப்பாட்டம்' செய்த தென்னாபிரிக்க அணிக்கு அம்லா (65), அணித் தலைவர் டு பிளசி (88) அரைசதம் கடந்து கைகொடுக்க, தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில், 7 விக்கெட்டுக்களை இழந்து 338 ஓட்டங்கள் குவித்தது.

கடின இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு அணித் தலைவர் கருணாரத்ன (87), மத்யூஸ் (64) நம்பிக்கை அளித்தனர். குசால் பெரேரா (0), தனஞ்செய டி சில்வா (5), லகிரு திரிமன்னே (10) உள்ளிட்ட மற்றவர்கள் ஏமாற்றினர். இலங்கை அணி 42.3 ஓவர்களில், 251 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்த' 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் பெலுக் வாயோ 4 விகெட்டுக்களைக் கைப்பற்றினார்.




# நெஹ்ராவின் 'ஆறு' அதிசயம்


ஆஷிஸ் நெஹ்ரா

கடந்த 2003ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஆஷிஸ் நெஹ்ரா நிகழ்த்திய அதிசயத்தை மறக்க முடியாது. டர்பனில் நடந்த இப் போட்டியில் முதலில் 'துடுப்பாட்டம்' செய்த இந்திய அணி 50 ஓவர்களில், 9 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி, 23 வயதான நெஹ்ராவின் 'வேகத்தில்' அதிர்ந்தது. நாசர் ஹூசைன் (15), அலெக் ஸ்ரூவேர்ட் (0) ஆகியோரை அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்கச் செய்தார். பின், மைக்கல் வோகன் (20), கொலிங்வுட் (18), கிரெக் வைட் (13), ரொனி இரானியை (0) வெளியேற்றிய இவர், மொத்தம் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இங்கிலாந்து அணி 45.3 ஓவர்களில் 168 ஓட்டங்களுக்கு 'சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.' இந்திய அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

இப்போட்டியில், தனது இடது கணுக்கால் காயத்தையும் பொருட்படுத்தாது பங்கேற்ற நெஹ்ரா, 10 ஓவர்களில், 2 'மெய்டன்கள்' அடங்கலாக 23 ஓட்டங்கள் கொடுத்து, 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் உலக கிண்ண அரங்கில் இந்தியா சார்பில் சிறந்த பந்துவீச்சை பதிவு செய்தார்.

இவரை ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச் சென்றார். இதற்கு முன், 1999ல் மன்செஸ்டரில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில், இந்தியாவின் வெங்க டேஷ் பிரசாத், 9.3 ஓவர்களில், 2 'மெய்டன்கள்' உட்பட 27 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியது சாதனையாக இருந்தது.

**தெரியுமா?**

கடந்த 1983ல் வீட்சில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் மே.தீவுகளின் வின்ஸ்டன் டேவிஸ், 10.3 ஓவரில், 51 ஓட்டங்களைக் கொடுத்து, 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது உலக கிண்ண அரங்கில் சிறந்த பந்துவீச்சாக இருந்தது. இச்சாதனையை, 2003ல் நமீபியாவுக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் முறியடித்தார். இவர், 7 ஓவர்களில், 15 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# பயிற்சியில் அசத்துமா இந்தியா?

## இன்று நியூசிலாந்துடன் மோதல்


பயிற்சியின்போது இந்திய வீரர் தோனி

உலக கிண்ணத் தொடருக்கான பயிற்சி போட்டியில் இன்று இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 30ல் ஆரம்பமாகிறது. இதில் இந்தியா, 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. தனது முதல் லீக் போட்டியில் தென்னாபிரிக்காவை ஜூன் 5ல் சவுத்தாம்ப்டனில் சந்திக்கிறது.

தற்போது பயிற்சி போட்டிகள் நடக்கின்றன. இன்று லண்டனின் ஓவல் மைதானத்தில் நடக்கவுள்ள போட்டியில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

**மிரட்டும் ஹோலி**

இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி நம்பிக்கை தருகிறது. ஐ.சி.சி., தொடர் என்றாலே, தவானுக்கு உற்சாகம் வந்து விடும். இந்த விளாசல் மீண்டும் தொடரலாம். ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்கு கிண்ணம் வென்று கொடுத்த மகிழ்ச்சியில் ரோகித் உள்ளார்.

அணித் தலைவர் விராட் ஹோலியின் 'போர்ம்' பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எப்படிப்பட்ட பந்துவீச்சையும் பார பட்சம் இல்லாமல் விளாசுவார். இம்முறை உலக கிண்ணத்தை கைப்பற்றும் எண்ணத்துடன் களமிறங்கி உள்ளார்.

**நான்காவது இடம்**

நான்காவது இடத்திற்கான வீரர்கள் தேர்வில்தான் தடுமாற்றம் தொடர்கிறது. லோகேஷ் ராகுல், விஜய் சங்கர் இடையே போட்டி காணப்படுகிறது. கடந்த ஐந்து ஒருநாள் போட்டியில் ராகுல் ஒரு அரைசதம் மட்டுமே அடித்துள்ளார். ஆனால், சமீபத்திய ஐ.பி.எல்., தொடரில் அதிக ஓட்டங்கள் (14 போட்டி, 593 ஓட்.,) குவித்தவர்கள் பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்தார். மறுபுறம், தமிழகத்தின் விஜய் சங்கர் இளம் நட்சத்திரமாக ஜொலிக்கிறார். இக்கட்டான நிலையிலும் அணிக்கு கைகொடுப்பார் என நம்பலாம். இன்றைய போட்டி நான்காவது இடத்திற்கான பிரச்னைக்கு தீர்வு தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'நடுத்தர வரிசையில்' கேதர் ஜாதவ், தோனி, ஹர்திக் பாண்ட்யா ஓட்டங்கள் குவிக்கலாம்.

ஒருநாள் அரங்கில், உலகின் 'நம்பர் 1' பந்துவீச்சாளரான பும்ரா இருப்பது பலம். இவருடன் ஷமி, புவனேஷ்வர் கைகோர்த்தால் 'வேகத்தில்' அசத்தலாம். யுவேந்திர சகால், 'சைனாமன்' பந்துவீச்சாளர் குல்தீப் பந்தை 'சுழற்ற' தயார்.

**நியூசி., எப்படி?**

நியூசிலாந்து அணியில் மார்டின் கப்டில், கொலின் முன்ரோ என விளாசல் வீரர்களுக்கு பஞ்சம் இல்லை. கேன் வில்லியம்சனின் தலைமைத்துவம், றொஸ் ரெய்லரின் அனுபவ ஆட்டம் அணிக்கு கைகொடுக்கும். கை விரலில் ஏற்பட்டுள்ள காயத்தால் டாம் லதாம் இன்று விளையாடமாட்டார். 'வேகத்தில்' டிரண்ட் போல்ட், ரிம் சௌதி, 'சுழலில்' சான்ட்னர், இஷ் சோதி சாதிக்கலாம்.

# யாழில் புத்தகக் கண்காட்சி

வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் எண்ணக்கருவிற்கு அமைவாக புத்தக விற்பனை மற்றும் கண்காட்சி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி முதல் செப்டம்பர் முதலாம் திகதி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தகண்காட்சிதொடர்பான ஊடக சந்திப்பு நேற்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது குறித்த கண்காட்சியை ஏற்பாடு செய்யும்இலங்கைநூல் விற்பனையாளர்கள் ஏற்றுமதி இறக்குமதி சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-5)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி.
ஜாயீசா அருளம்மா தம்பிராசா

முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா அவர்களின் அன்புத்தாயார் அமரர் ஜாயீசா அருளம்மா தம்பிராசா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புற்றளை மகா வித்தியாலயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
செல்வவிநாயகம் சிவராசராமலிங்கம்

பிறப்பு 1945.05.15 இறப்பு 2019.04.25

கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தில் லிகிதராக கடமையாற்றும் சி.ரவிக்குமார் அவர்களின் தந்தையார் அமரர் செல்வவிநாயகம் சிவராசராமலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(C-6466)

நலன்புரிச்சங்க சமூகம்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பொன்மணி சண்முகராஜா (பொன்னக்கா)

பிறப்பு 1934 - 07 - 06



இறப்பு 2018 - 06 - 05

அம்மா என்ற ஸ்தானத்தை தவறாது காத்த
சாயாத கோபுரமே சாய்ந்தனையோ நாம் தவிக்க
எங்கு பார்த்தாலும் நீ தான் இருக்கிறாய்
எதைத்தான் செய்தாலும் நீ தான் வருகிறாய்
காற்றில் தவழுகின்றாய் கண்மூடத் தெரிகிறாய்
கண்ணீரைத் துடைத்தெறிந்து நெஞ்சைக் கல்லாக்கிக் கிடக்கின்றோம்
கண்ணுறங்காமல் காத்து கண்வளர வைத்த
கலங்கரை விளக்கே எம் வம்சத்தின் விளைநிலமே வருடம் ஒன்றாகி விட்டது
எந்நாளில் இனி எம் தெய்வத்தை எங்கு தான் காண்போம்

துர்க்காபுரம்,
மல்லாகம்.

(8896)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
M.A.பஞ்சநாதன் JP

(ஓய்வுநிலை அலுவலர், மக்கள் வங்கி வட பிராந்திய காரியாலயம்)

திதி: தேய்பிறை சப்தமி
25.05.2019

தோற்றம் 1942 - 12 - 13

மறைவு 2016 - 05 - 28

அன்புள்ள அப்பாவே!
ஆண்டு மூன்று ஆனதுவோ ஆறவில்லை எமது துயரம்
காவலாய் நீங்கள் இருந்தீர்கள்
கவலையின்றி நாங்கள் வாழ்ந்தோம்
உற்ற துணை நாம் இழந்தோம் ஊனுருகிப் போகின்றோம்
எங்கள் இதயத்தின் தீபமே எங்கள் இனிய அப்பாவே
வாழ்வு என்னும் கொடையை எமக்குத் தந்த தெய்வமே
இவ்வுலகில் நாம் வாழ எம்மை வழி நடத்திச் சென்றவரே
வழிதனில் எம்மை விட்டு பிரிந்தது தான் ஏனோ
ஆயிரம் உறவுகள் எம்மைத்தேடி வந்தாலும்
எங்கள் அன்பு அப்பாவே
அவை அனைத்தும் உங்கள் அன்பிற்கு ஈடாகுமோ
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் நீங்களே
எங்களின் அப்பாவாக வரவேண்டுமென
இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் ஆன்மா பேரின்ப வீட்டில் இளைப்பாற
எல்லாம் வல்ல நாராயணனிடம் இறைஞ்சுகின்றோம்.

(8911)

69B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2560

தங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.


## இராசி பலன்

25.05.2019

வைகாசி 11, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

சஷ்டி காலை 7.20 மணிவரை

திருவோணம் முற்பகல் 11.08 மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி, புத | ராகு, செவ் |
| | | | |
| சந் | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் வெற்றி தரும், கௌரவமான நாள்.

**மேடம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மிதுனம்** எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்யும் நிலையுண்டு.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**சிம்மம்** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும் நாள், தள்ளிப் போட்டுவந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

# அவசர சிகிச்சைப் பிரிவு இன்று முதல் புதிய கட்டடத்தில்



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இன்று சனிக்கிழமை முதல் பொதுமக்களுக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும்.

எனவே விபத்து மற்றும் அவசர சிகிச்சைகளுக்காக வருபவர்கள் 25.05.2019 சனிக்கிழமை முதல் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதிக்குரிய புதிய நுழைவாயிலூடாக வருமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அனுப்பி வைத்துள்ள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# மரணச்சடங்கு நடந்த வீட்டில் 2 இலட்சம் ரூபாய் திருட்டு

(கரணவாய்)

அந்தியேட்டி கிரியை செய்வதற்காகச் சேர்த்து வைத்திருந்த பணம் திருடப்பட்ட சம்பவம் உடுப்பிட்டி, ஆரியாமலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மேற்படி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மரணச் சடங்கு இடம் பெற்றது.

அங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை அந்தியேட்டிக் கிரியை நடைபெறவுள்ளது. இதற்காக சேகரிக்கப்பட்ட இரண்டு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய் பணம் இருந்துள்ளது. அதிகாலை வீட்டில் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்தவர்களுக்கு மயக்க மருந்து வீசிவிட்டு அங்கிருந்த பணம், தொலைபேசி, மடிக்கணனி, என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-60)

## உணவு பாதுகாப்பு சட்டங்களை மீறியவர்களுக்கு அபராதம்

(கரணவாய்)

உணவு பாதுகாப்பு விதிமுறைகளை மீறியமை தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன் இரண்டு வர்த்தக நிலையங்களுக்கு சீல் செய்யுமாறும் பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

மேற்படி விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை (II) பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டால் ஏழு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதற்கு அபராதமாக ரூபாய் 95 ஆயிரம் விதிக்கப்பட்டதுடன் மிகவும் சுகாதார சீர்கேடாகவும், அதிகளவு காலாவதியான பொருட்கள் காணப்பட்டதாலும் பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றிற்கு சீல் வைக்கப்பட்டது.

புலோலி சுகாதார பரிசோதகர் பா.சயந்தனினால் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றிற்கு 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றிற்கும் சீல் வைக்கப்பட்டது. மேலும் டெங்கு குடம்பிகளை தமது வளாகத்தில் வைத்திருந்த ஐவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (5-60)

# வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் விபத்து

## பெண் படுகாயம்



(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வேலியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை பிற்பகல் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள புறாப்பொறுக்கி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியோரம் இருந்த வேலியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இமையாணன் பகுதியைச் சேர்ந்த பெண் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் 7 பேருக்கு ரூ.33 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம் பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 7 பேருக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ் நீதவான் நீதிமன்றம் 33 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம் பெற்ற மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை போன்ற போக்கு வரத்து விதிகளை மீறியதாக குறித்த நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மேற்கண்டவாறு அபராதம் விதிக்கப்பட்டது. (இ-10)

# சத்சங்கம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தி மருதனார்மடம் வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெறும். இதில் தொண்டின் இரகசியங்கள் ஆன்மீக உரையும் இடம்பெறும். (5)

# புனித பிலிப்பு நேரியார் திருநாள்

(பொற்பதி)

வடமராட்சிக்கிழக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தின் திருநாள் இன்று சனிக்கிழமை இடம்பெறும். இதில் காலை 06.15 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பெருநாள் திருப்பலி, திருநாள் திருப்பலியை அவ் ஆலயத்தின் முன்னாள் பங்குத் தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் ஒப்புக் கொடுப்பார். திருநாளிற்கு வரும் பக்தர்களின் போக்குவரத்தை இலகுவாக்கும் முகமாக யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையிலிருந்து வடம ராட்சிக் கிழக்கிற்குள் நுழையும் அரச மற்றும் தனியார் பயணிகள் பேருந்துகள் அனைத்தையும் செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய வளாகத்திற்கு வந்து போவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-64)



வடமாகாண ஆளுநரின் பொதுமக்கள் தினம் கடந்த புதன்கிழமை கைதடியிலுள்ள முதலமைச்சர் செயலகத்தில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பங்குபற்றினர்.

# முதியோர் மருத்துவ முகாம்

யாழ். பிரதேச செயலகத்தின் ஜே/ 68 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள முதியவர்களுக்கான மருத்துவ முகாம் நாளை மறுதினம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.

இதில் பங்குபற்ற வருபவர்களை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# ஆட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்தல் தரிப்பிடங்கள் தொடர்பான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் ஆட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 14ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில், யாழ். மாநகர சபை வடமாகாண போக்குவரத்து அதிகாரசபை, யாழ்.மாவட்ட பொலிஸ் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை, அளவீட்டு நியமங்கள் பணியகம் ஆகிய திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட வர்த்தக சங்க உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்க உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

யாழ்.மாநகரசபைப் பகுதியிலுள் சேவையினை மேற்கொள்ளும் ஆட்டோக்கள் யாவும் யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்திகள் உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்திகள் உரிமையாளர் சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட ஆட்டோக்கள் யாவற்றிற்கும் கட்டண மீற்றர் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த ஆட்டோ ஓட்டுநர்கள் யாவரும் தங்களுடைய பெயர், அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை பயணிகள் பார்வைக்கு முச்சக்கர வண்டியில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் ஆட்டோ ஓட்டுநர் தங்களுடைய படப்பிரதியையும் காட்சிப்படுத்துவதும் விரும்பத்தக்கது.

கட்டண மீற்றர் பொருத்தப்பட்ட ஆட்டோக்கள் பயணிகள் தேவையின் போது கட்டண மீற்றர் செயற்பட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

யாழ். மாநகர சபையால் ஆட்டோக்களுக்கென ஆட்டோவின் இலக்கமிடப்பட்ட ஒதுக்கப்பட்ட இடத்தில் குறித்த இலக்கத்தை யுடைய ஆட்டோவிலே தரித்து நிற்க முடியும்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மேற்குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத ஆட்டோக்கள் தரிப்பிடத்துக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து பயணிகள் சேவையை மேற்கொள்ளுமாயின் குறித்த ஆட்டோ சாரதிகளுக்கு பொலிஸாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு குறித்த ஆட்டோ அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தற்கால பாதுகாப்பு நிலைமையை கருத்திற் கொண்டு தாங்களது பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக மேற்குறித்த செயற்பாடுகளை பூர்த்தி செய்த கட்டண மீற்றர் பொருத்திய ஆட்டோவை பொதுமக்கள் கூடுதலாகப் பாவனைக்கு பயன்படுத்தினால் பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபராலும் கலந்துரையாடலில் பங்கு பற்றியவர்களாலும் தெரிவிக்கப்பட்டது. (5)

# சீர்திருத்தப் பள்ளியிலிருந்து 3 பெண்பிள்ளைகள் தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரச சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து கடந்த 18 ஆம் திகதி மூன்று பிள்ளைகள் தப்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த சீர்திருத்தப் பள்ளியில் நீதிமன்றங்கள் ஊடாக அனுப்பப்படும் சிறுவர்களை மீண்டும் சமூகத்துடன் இணைக்கும் பணி இடம் பெற்று வருகிறது. இந் நிலையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 18 வயதுக்கு குறைவான பெண் பிள்ளை நன்னடத்தைக் காலத்தை அனுபவிப்பதற்காக நீதிமன்றத்தால் மருதங்கேணி சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த பெண்பிள்ளை உட்பட மேலும் இருவர் சேர்ந்து கடந்த 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை இல்லத்தை விட்டுத் தப்பித்த நிலையில் இருவர் மட்டுமே இல்லத்துக்கு மீண்டும் வருகை தந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக குறித்த இல்லத்துடன் தொடர்பு கொண்ட போது தப்பித்த இரு பெண்களும் விசாரித்ததற்கமைய குறித்த பெண்பிள்ளை உறவுக்காரப் பெண்ணுடன் சென்றதாகக் கூறினர். இந்நிலையில் குறித்த பெண்ணின் உறவினர்கள் தெரிவிக்கும் போது பெண்பிள்ளைகள் குறித்த இல்லத்திலிருந்து காணாமல் போய் ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தும் இதுவரை பிள்ளையைத் தேடித் தரவில்லை எனக் குற்றம் சாட்டினர். (இ-10)

வலம்புரி
021 221 7603,
021 567 1532,
விளம்பரத் தொடர்புகட்கு

## பெயர் மாற்ற அறிவித்தல்

பிர்ாமண தெரு, தும்பளை மேற்கு, பருத்தித்துறை எனும் முகவரியை உடைய குமாரசாமி சாந்தகுமார் ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் எனது பெயர் சாந்தகுமார என பதியப்பட்டுள்ளது.

இருப்பினும் எனது சகல ஆவணங்களிலும் சாந்தகுமார் எனும் பெயரே இருப்பதால் இனிவரும் காலங்களிலும் எனது சகல ஆவணங்களிலும் சாந்தகுமார் என்ற பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள :- கு.சாந்தகுமார்**
**25.05.2019**

(8915)

# கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

# பதவி வெற்றிடம்

## சுகாதார தொழிலாளி, வேலை வெளிக்களத் தொழிலாளி பதவிக்கான ஆட்சேர்ப்பு-2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 01.01.2013 ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கு அமைவாகவும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2014 இல் மறுசீரமைக்கப்பட்ட ஆளணி விபரங்களிற்கு அமைவாகவும் பிரதம செயலாளர் வடக்கு மாகாணம் அவர்களின் NP/01/02/03/01/14/Karachchi PS ஆம் இலக்க 09.05.2019 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கரைச்சி பிரதேச சபையின் சுகாதார தொழிலாளி, வேலைவெளிக்களத் தொழிலாளி ஆகிய பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சுகாதார தொழிலாளி தரம் III | 05 |
| 02. | வேலைவெளிக்களத் தொழிலாளி தரம் III | 01 |

சேவை நிபந்தனைகள்:

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப் படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (14.06.2019) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை:

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:

01. கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில்விடுமுறை நாட்கள் தவிர்ந்த அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரைரூபா.50/- இனைச் செலுத்திவிண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்டவிதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் எனநியமனத்திற்குமுன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோமுன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதுஎனத் தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
06. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத் திகதியான 14.06.2019 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பமுடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள்:

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டிற்குமேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் கௌரவ ஆளுநரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 8 / ஆண்டு 9 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

PL-1-Rs, 24,250-250x10-270x10-300x10-330x12-36,410/= (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவானது.)

**திரு. கா. சண்முகதாசன்,**
**செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(சி-6469)

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் நல்லூர்.

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் - | வகை II |
| 2. | யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்- | வகை II |
| 3. | யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை- | வகை II |
| 4. | யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை - | வகை III |

தகைமைகள்:

- வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவைதரம் 2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் 2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவைதரம் 3 கவனத்தில் கொள்ளப்படும்.
- வகை III பாடசாலைகளுக்கு இலங்கைஅதிபர் சேவைதரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
  - விண்ணப்பிக்கவிரும்புபவர்கள் விண்ணப்பமுடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டுகாலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
  - விண்ணப்பதாரிதற்போதுஅதிபராககடமையாற்றும் பாடசாலையில் 03 வருடசேவையைநிறைவுசெய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையைசேவைநிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், உதவி,பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனைபொருத்தமற்றது.

குறிப்பு:

- மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 10.06.2019 ஆம் திகதி அல்லது அதற்குமுன்னர் பதிவுத் தபாலில் "வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர்" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2019" எனக் குறிப்பிடவும்.

**திரு.செல்வரட்ணம் சந்திரராஜா,**
**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்**

(சி-6470)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்:கேட்டை 2
கி.பா:28 உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA,MA, ஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/2767

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 3
கி.பா: 12 உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/2800

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 1
கி.பா: 30 ¼செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L,சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: A/L,சைவபோசனம்
தொ.இ: B/2803

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 4
கி.பா: 21 ¾செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு: A/L, உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/2804

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 26செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை தொழில்:BMSபட்டதாரி, Ass. Accountant
எதிர்பார்ப்பு: Engineer, Accountant
தொ.இ: G/5065

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 2
கி.பா: 32செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்.
*பெண் கணவரை இழந்தவர்
தொ.இ: G/5070

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:சதயம் 2
கி.பா: 30 ¼ சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:B.Sc, Junior Excecutive Officer
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Accountant,
தொ.இ: G/5072

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 1
கி.பா: 43 ½ உயரம்: 5'
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி பயிலுநர்
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/5085

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# ஜனாதிபதி மைத்திரியின் இனவாதப் போக்கை ஞானசாரரின் விடுதலை வெளிப்படுத்தியுள்ளது

## அருட்தந்தை சக்திவேல் சாட்டை

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரர் விடுவிக்கப்பட்டுள்ளமை முழுமையான அரசியல் நோக்கத்திற்காகவேயாகும் எனத் தெரிவித்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல், தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையை செவிமடுக்காத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இனவாதம் இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் நீண்டகால குறலுக்கு பதில் வழங்காது இவ்வாறு செயற்பட்டுள்ளமை ஜனாதிபதியையும் ஒரு இனவாதியாகக் காண்பிக்கின்றது. இதே நிலைமை தொடருமாக இருந்தால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். அத்தோடு அரசியல் கைதிகளாக சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர்களிலும் மதத் தலைவர்கள் உள்ளனர். ஜனாதிபதி ஏன் அவர்களை விடுவிக்கவில்லை?

எனவே ஞானசார தேரரை விடுவித்ததன் மூலம் எதிர்வரும் தேர்தல்களில் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ளும் அரசியல் நோக்கமே உள்ளது. அதே அரசியல் நோக்கத்திற்காகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமலுள்ளனர் என்பதும் தெளிவாகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாவற்குழியில் இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்கு பிரதிவாதிகள் ஆஜராகாததால் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பகுதி இராணுவ முகாம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 3 தமிழ் இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களை பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாகாததால் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் இரண்டாம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று குறித்த வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கின் முதலாவது பிரதிவாதிகளான இராணுவ அதிகாரி துமிந்த கெப்பிட்டிவலான இரண்டாவது பிரதிவாதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க மற்றும் சட்டமா அதிபர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி முதலாம் இரண்டாம் பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகும்.

பிரதி மன்றாடியார் வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருப்பதாகவும் அவர் மன்றில் முன்னிலையாவதற்கு ஓகஸ்ட் முதலாம், இரண்டாம் திகதிகளுக்கு வழக்கை ஒத்திவைக்குமாறு மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதனை ஆட்சேபித்த மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையில் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அன்றைய தினம் மன்றின் அறிவுறுத்தலை ஏற்றுப் பிரதிவாதிகளுக்கு சேர்ப்பதாக இராணுவ சட்டத்தரணி மேல் நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கியதாக மன்றுரைத்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதவான் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பும் ஆவணங்களை மனுதாரர்களின் சட்டத்தரணியை மன்றில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியதுடன் வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம், இரண்டாம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (இ-10)

## ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையைப் பெற மே 31 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதி வரையில் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

2019 ஆம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைவதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

2019ஆம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருக்கும் ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தை உரிய முகவரி ஆவணங்களுடன் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க தகவல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கின்றோம்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்கள் www.news.lk மற்றும் www.dgi.gov.lk என்ற இணையத் தளங்களின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கையில் நிரந்தரத் தளம் அமைக்கும் எண்ணமில்லை

### அமெரிக்கத் தூதுவர் மீண்டும் தெரிவிப்பு



(கண்டி)

இலங்கையில் நிரந்தரமான அமெரிக்கத் தளத்தை அமைப்பது தொடர்பான எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் மீண்டும் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் அலைனா நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டியில் அஸ்கிரிய மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் மூலம் பாதுகாப்புக்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

கூட்டாக பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக இலங்கையுடன் நாங்கள் உடன்பாடு செய்துள்ளோம். கடந்த அரசாங்கத்துடன்கூட இது போன்ற உடன்பாடுகளை நாங்கள் செய்திருக்கின்றோம்.

எனினும் இலங்கையில் நிரந்தரமான தளத்தை அமைக்க நாங்கள் தீர்மானிக்கவில்லை. அது குறித்து எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

அமெரிக்கப் படைகள் பயணங்களை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதற்கு மாத்திரம் உடன்பாட்டை எட்டியுள்ளோம். நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் இந்த உதவி மிகவும் முக்கியமானது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்பு மியன்மாரில் இலங்கையர் கைது

(ரங்கூன்)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் மியன்மாரில் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

விசா புதுப்பித்தலுக்காக குடிவரவு- குடியகல்வு திணைக்களத்திற்கு சென்ற போதே குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் 39 வயதுடைய அப்துல் சலாம் இர்ஷாத் மொஹமட் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட குறித்த நபருக்கு தற்கொலை குண்டு தாக்குதலுடன் தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸ் விசேட பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுற்றுலா விசாவில் அந்நாட்டுக்குச் சென்ற குறித்த நபர் கடந்த ஒரு வருடம் 2 மாதங்களுக்கு மேலாக அங்கு தங்கியிருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 102 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த பெருந்தொகை தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை புதிய மகசீன் சிறைச்சாலையில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் சிறைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த 44 தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சுமார் 102 அரசியல் கைதிகள் இந்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறைச்சாலைக்கு அருகில் புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட பெருந்தொகை தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் முறை என சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதிகளுக்கு விற்பனை செய்ய இந்தத் தொலைபேசிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றை வைத்து இந்த தொலைபேசிகள் புதைக்கப்பட்டிருந்தன.

இது சம்பந்தமாக சிறைச்சாலை அதிகாரி ஒருவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாக சிறைச்சாலை தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-7)

# அந்நியச் செலவாணி ஈட்டலுக்கான வழிவகைகள் இறுக மூடப்பட்டுள்ளன

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்த நாட்டின் எதிர்கால எழுச்சியை பொருளாதார அடிப்படையில் கொண்டு கட்டியெழுப்புகின்றபோது, மிகவும் கடுமையான உழைப்பை நேர்மையான தன்மையுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியமே முன் நிற்கின்றது என்றே கூற வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலவாணி சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான பிரேரணைகள் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்நியச் செலாவணி ஈட்டலுக்கான வழிவகைகள் ஏற்கனவே விரிவாக்கம் பெறாது இருந்து வந்துள்ள நிலையிலேயே, கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர், விரிவாக்கம் பெற வேண்டியிருந்த அந்த வழிவகைகளும் இன்று இறுக மூடப்பட்டு கிடக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஒரு பக்கம் நாட்டிற்கான அந்நியச் செலாவணிக்குரிய மார்க்கங்களை பலப்படுத்த வேண்டிய அதே நேரம், பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்பதும் மறு பக்கத்தில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டு நிலைமையில், பொருளாதார நெருக்கடியின் சுமையை ஏழை மக்கள் மீதும், தொழிலாள மக்கள் மீதும் திணிக்காது இருக்கக் கூடிய நிலைமைகள் இங்கே தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகின்றேன்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தற்போது வாய்ப்புக்கள் குறைவாகவுள்ள நிலையில், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்கின்ற மகுடத்தை வைத்துக் கொண்டு, சமூக மற்றும் வாழ்க்கைக்குரிய மக்களின் தேவைகளின் மீது ஒடுக்குதல்கள் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

தற்போதைய பயங்கரவாதத்தின் ஒருங்கிணைந்த அழுத்தமானது, பொருளாதாரத்தை சீர்குலைப்பதும், பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதுமாகும் என்றே சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது, செலுத்த வேண்டிய நிலுவைகள், அந்நிய நிதி நிலைமை மற்றும் நிதி மானியங்கள் தொடர்பில் பாதிப்பு மிக்க அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்பதுடன், இதன் ஊடாக வெளிவாரி பாதுகாப்பற்ற தன்மை அதிகரிப்பதானது இதன் மிகப் பாரிய பாதிப்பாக அமையும் என்றும் சுட்டிக்காட்டப்படுவதை அவதானத்தில் கொள்ள வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஞானசாரரின் விடுதலையால் எனக்கும் குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தல் -சந்தியா



(கொழும்பு)

ஞானசார தேரரின் விடுதலையானது தனக்கும் தனது குடும்பத்துக்கும் பாரிய உயிர் அச்சுறுத்தலாக அமையும் எனவும், இதற்குப் பொறுப்புக் கூறுவதற்கு முன்வருமாறு ஐக்கிய நாடுகள் சபையிடமும், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளின் சகல தூதுவர் அலுவலகங்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன் என ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரரின் பொது மன்னிப்பு குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்பு; ஹொரவப்பொத்தானையில் ஐவர் கைது

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தகவல்

(கொழும்பு)

பயங்கரவாதத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய மேலும் 5 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.



இவர்கள் ஐவரும் ஹொரவப்பொத்தானை பகுதியில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அவர்கள் தற்கொலைத் தாக்குதல்களுடனும் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் என்று சந்தேகம் எழுந்துள்ளதாகவும் இவர்கள் புலனாய்வுப் பிரிவுகளால் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

எனவே கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# “நாட்டுக்காக உயிரைத் துறக்கத் தயார்; தியாகம் செய்ய நாடு இருக்க வேண்டும்”

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த, பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விசேட பொது மன்னிப்பு அளிக்கப்பட்டதன் பின்னர், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து அவர், நேற்று முன்தினம் மாலை வெளியேறினார்.

ஜனாதிபதியினால் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள், நீதியமைச்சின் ஊடாக, சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன்பின்னரே அவர், விடுவிக்கப்பட்டார்.

கடத்தி காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தி, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம், அவருக்கு, 6 வருடங்கள் அனுபவிக்கும் வகையில் 19 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனையை கடந்தவருடம் ஓகஸ்ட் 18ஆம் திகதி விதித்தது.

இதேவேளை, ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விசேட பொது மன்னிப்பு, அரசமைப்பு முரணானது என்றும், அரசமைப்பை மீண்டுமொரு தடவை ஜனாதிபதி மீறிவிட்டார் என்றும் பரவலாக குற்றஞ்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதனிடையே, சிறைச்சாலையிலிருந்து பின்கதவால் அழைத்துச் செல்லப்பட்ட ஞானசார தேரர், ருக்மல்கம விகாரையில், வழிபாடுகளை முடித்துகொண்டு, அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், “நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்வதற்கு நான் தயார். ஆனால், தியாகம் செய்வதற்கு நாடு இருக்கவேண்டும்” எனத் தெரிவித்தார். (இ-7)

# ஜிஹாதிகளிடம் ஆயுதம் இருந்தது ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு தெரியும்

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)


மட்டக்களப்பில் இயங்கிய ஜிஹாதிகளிடம் ஆயுதம் இருந்தமை உள்ளிட்ட முழுமையான விபரங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவிற்கு தெரியுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றம் சாட்டினார்.

அத்தோடு உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான் தொடர்பாகவும் கிழக்கு ஆளுநருக்கு தெரியுமெனயோகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகள் காலத்தில்கூட இலங்கைக்கு சுற்றுலா வந்தவர்கள் பயப்படவில்லை. ஆனால், இன்று ஹோட்டல்களுக்கே குண்டு வைப்பதால் சுற்றுலாப் பயணிகள் வருகைதர அச்சமடைவதாகவும்யோகேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

இதனால் அந்நியச் செலாவணி பெரிதும் இழக்கப்படுகின்றதை பற்றி சிந்திக்காமல், ஜனாதிபதியும் பிரதமரும் தமது பதவியை காப்பாற்றிக்கொள்ளவும் மீண்டும் ஆட்சியை பிடிக்கவுமே செயற்படுகின்றனர் எனவும் விசனம் வெளியிட்டார்.



இதனால், பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதென குற்றஞ்சாட்டினார்.


இதேவேளை, 20[illegible]ஆம் ஆண்டு சஹ்ரான் தொடர்பில் அப்போதே முஸ்லிம் மக்கள் தகவல் வழங்கியும் அது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினரும் அப்போது அமைச்சராக இருந்த ஹிஸ்புல்லாவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சஹ்ரான் குழுவினர் பற்றி ஹிஸ்புல்லாவிற்கு சகல விடயங்களும் தெரியும். எனினும் அவர் எதையும் வெளிப்படுத்தவில்லை.

மேலும், முஸ்லிம் பகுதிகளுக்கு அரபு நாடுகளிலிருந்து பெருமளவான நிதி வருகின்ற போதும், அதுபற்றி கவனஞ்செலுத்தவில்லையென்றும் அதுவே தற்போது பாரிய அழிவுக்கு வித்திட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், குற்றவாளிகளை அரசாங்கம் பாதுகாக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். அதுமட்டுமன்றி, இனவேறுபாடற்ற மற்றும் இலஞ்ச ஊழலற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-7)

# கடல் சங்குகளை கடத்தியவர் கடற்படையினரால் கைது



(மன்னார்)

மன்னார் பொலிஸார் மற்றும் கடற்படை வீரர்கள் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது உரிய அனுமதிப்பத்திரம் இல்லாமல், கடல் சங்குகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் சந்தியில் உள்ள வீதி தடையில் வைத்து குறித்த வாகனம் சோதனைக்கு உற்படுத்தப்பட்ட போதே உரிய அனுமதிப்பத்திரம் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட சாங்கு மூட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வாகனத்தில் இருந்த மூட்டைகளில் இருந்து 2,500 சங்குகள் மீட்கப்பட்டுள்ளன. சங்குகளைக் கொண்டு சென்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் பேசாலையிலிருந்து மன்னாருக்கு சங்குகளை கொண்டு செல்லும் போதே கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பேசாலையைச் சேர்ந்தவர் எனவும், சங்குகள் மற்றும் வாகனம், கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-285)

# வரட்சியால் வவுனியாவில் 39 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக நிலவிய வரட்சி காரணமாக 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் பாதிப்படைந்துள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.தனுராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் முதல் ஏற்பட்ட வரட்சி காரணமாக வவுனியா வடக்கு மருதோடை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான காஞ்சிராமோட்டை பாதிப்படைந்துள்ளது. இதன் காரணமாக இங்கு வசிக்கும் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் குடிநீர் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு இம் மக்களின் குடிநீர் விநியோகத்திற்காக 78 ஆயிரத்து 500 ரூபாய் முதல் கட்டமாக வழங்கப்பட்டு கடந்த மார்ச் மாதம் முதல் தொடர்ந்தும் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வாண்டு நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையின் போது வரட்சியினால் பாதிப்புக்கள் பெரியளவில் ஏற்படவில்லை என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. (9-250)

## வடக்கில் மூன்று மாவட்டங்களில்

# நெல் உலர்த்தும் தளங்கள் அமைக்க ஆறு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

வடக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் மாவட்ட விவசாயத் திணைக்களங்கள் ஊடாக, நெல் உலர்த்தும் தளங்கள் அமைக்க 6 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசினூடாக வட மாகாண விவசாய அமைச்சிற்கு இவ் வருடத்துக்கான (2019) நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள நெற் பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நெல் உலர்த்தும் தளங்கள் அமைக்கப்படவுள்ளன.

இனிவரும் காலங்களில் நெற் பயிர்ச்செய்கையாளர்கள் வீதியோரங்கள் வயல் வெளிகளில் தாம் உற்பத்தி செய்த நெல்லை காயவிடும் செயற்பாடுகளை தவிர்க்கும் வகையில் இந்த நெல் உலர்த்தும் தளங்கள் அமைக்கப்படவுள்ளன. (9-10)




## கண்டாவளை பிரதேச செயலகத்தின்

# இடைநிறுத்தப்பட்ட கட்டுமானப் பணிகள்

## மீண்டும் ஆரம்பம்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் தாமதம் அடைந்திருந்த புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் இன்றி குறித்த பிரதேச செயலகமானது பல்வேறு இடநெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

குறிப்பாக, திட்டமிடல் செயலகம் புளியம்பொக்கணைச் சந்தியும் ஏனைய நிர்வாகச் செயற்பாடுகள் கண்டாவளைப் பகுதியில் அமைந்துள்ள பிரதேச செயலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த பிரதேச செயலகத்தை அமைப்பதற்கான நிதி இரண்டு தடவைகள் கிடைக்கப்பெற்று பிரதேச செயலகத்தின் அமைவிடம் தொடர்பில் ஏற்பட்ட இழுபறி நிலையினால் இதற்கான நிதி திரும்பிச்சென்ற நிலையில் மூன்றாவது தடவையாக நிதி கிடைக்கப்பெற்ற நிதியின் மூலம் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

புதிய பிரதேச செயலகத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவுற்று கடந்த ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டபோதும் இதன் கட்டுமானப் பணிகள் இதுவரை முழுமை பெறவில்லை.

இதன் பணிகள் தாமதம் அடைந்து குறிப்பிட்டகாலம் கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன. தற்போது குறித்த பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் மிக விரைவில் இதன் பணிகளை நிறைவுறுத்தி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்ட இழப்பீடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற்கட்ட இழப்பீடு வழங்கி வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த மாதம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் புயல் தாக்கத்தால் 25 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 3 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 22 வீடுகளும் புயல் காற்றால் சேதமடைந்துள்ளன.

இந்த அனர்த்தம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பிரதேச செயலக அதிகாரிகளாலும் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டு அழிவு தொடர்பான திட்டமிடல் அதிகாரிகளால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், 25 குடும்பங்களுக்கும் முதற்கட்டமாக தலா பத்தாயிரம் ரூபாய் நிதி தேசிய அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவை நிலையத்தால் ஒதுக்கப்பட்டுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இவர்களுக்கான குறித்த நிதி ஒதுக்கீடு விரைவில் பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (9)

# வழங்கப்பட்ட அதிகாரங்களை கொண்டு பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்

## சட்டத்தரணி எஸ்.டினேசன்

மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் பிரச்சினைகளை இங்கேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் என சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர மற்றும் பிரதேச சபைகளுக்கிடையே நடைபெற்று வரும் எல்லை சம்பந்தமான வழக்கு கடந்த வியாழக் கிழமை மன்னார் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே மேற்படி கருத்தை தனது வாதத்தில் முன்வைத்தார்.

மன்னார் நகர சபைக்கும் மன்னார் பிரதேச சபைக்கும் இடையில் எல்லை சம்பந்தமாக முறுகல் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அமைதிக்கு பங்கம் ஏற்படுவதாகத் தெரிவித்து மன்னார் பொலிஸார் நீதவான் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு கடந்த வியாழக் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மன்னார் நகர சபை சார்பாக சட்டத்தரணிகள் தங்கள் வாதங்களை முன்வைக்கையில்,

மன்னார் நுழைவாயிலான பாலப்பகுதி மன்னார் நகர சபைக்குச் சொந்தமானது. அது மன்னார் நகர சபையில் பதிவாகியும் இருக்கின்றது. ஆகவே நாங்கள் இப் பிரச்சினை தீர்வுக்கு மத்திய அரசை நாடுவது மேல் என தங்கள் வாதங்களை முன் வைத்தனர்.


இதற்கு மன்னார் பிரதேச சபை சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி எஸ். டினேசன் தனது கருத்தை முன் வைக்கையில், 2005 ஆம் ஆண்டு வெளியாகிய வர்த்தமானியில் மன்னார் நகர சபையினதும் மன்னார் பிரதேச சபையினதும் எல்லை விடயமாக மிகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லையை நிர்ணயிப்பது மாகாண சபையா? அல்லது மத்திய அரசா? என்ற நிலைப்பாடு ஒன்று இங்கு காணப்படுகின்றது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாத நிலையிலும் கூட உள்ளூராட்சி சபைகளை மாகாண சபை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்கள் பூரணமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே எங்களுக்குள்ள பிரச்சினைகளை நாங்களே எங்களுக்குள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதை விடுத்து தரப்பட்ட அதிகாரத்தை மீண்டும் மத்திய அரசுக்கு நாம் தாரை வார்க்க முடியாது எனத் தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களின் பின்னர் நீதவான் ரி.சரவணராஜா இந்த வழக்கானது அமைதிக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இரு தரப்பினரும் இவ் எல்லை சம்பந்தமாக அப்பகுதியில் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதா? அல்லது ஏற்படவில்லையா? என்பதை அடுத்த தவணையின்போது நிரூபிக்க வேண்டும் என நீதவான் கட்டளை பிறப்பித்து வழக்கை ஒத்திவைத்தார். (9-285)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவு கே.என் 35 சிவநகர் கிராம மூத்தோர் சங்கத்தின் அங்கத்தவர்களில் 80 வயதிற்கு மேற்பட்ட மூத்தோர்களுக்கு மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சிவநகர் மூத்தோர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.இரகுபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் திருமதி.ஆரணி தினேஸ், சிவநகர் கிராம உத்தியோகத்தர் திருமதி.ச.சாரதா, அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:சிவநகர் செய்தியாளர்)

# போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார தொண்டர்களுக்கு

## நேர்முகத் தேர்வு

வவுனியாவில் தொடர்ச்சியாக 100 நாட்கள் கவனயீர்ப்புப் போராட்டம் மேற் கொண்ட சுகாதாரத் தொண்டர்கள் 154 பேர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட் டுள்ளதாக சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதி களைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் ஒன்றிணைந்து நியமனம் கோரி கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு அரசியல் தலைமைகளைச் சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் நேர்முகத் தேர்விற்கு 154 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தொண்டர்கள் சுகாதார சேவைகள் ஊழியர்களாக இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நேர்முக தேர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா மாவட்ட சுகாதாரப்பணிமனை யில் இடம்பெறவுள்ளது. (9-250)

# வவுனியா வர்த்தக நிலையங்களுக்கு பொலிஸார் விசேட அறிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலைய ங்களுக்கு வவுனியா பொலிஸார் விசேட அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளனர்.

அவசரகாலச் சட்டத்திற்கு அமைவாக வவுனியா பொலிஸாரினால் வர்த்தக சங்கத்தின் ஊடாக வர்த்தக நிலையங் களுக்கு விநியோகம் செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் உரிமையா ளர்கள், ஊழியர்களின் விபரப் படிவத் தினை பூரணப்படுத்தி எதிர்வரும் திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னர் வர்த்தகர் சங்கத்தின் அலுவலகத்தில் கையளிக்குமாறு வவுனியா பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வி.எச்.ஸ்ரீ. சம்பத் பெரேரா அறிவித்துள்ளார். (9-250)

# அரச உத்தியோகத்தருக்கு இடையூறு விளைவித்த பெரும்பான்மையினத்தவர் விளக்கமறியலில்

(பனிக்கன்குளம்)

அரச உத்தியோகாத்தருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியிலுள்ள பெரும்பான் மையினத்தை சேர்ந்த நபரொருவர் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த 14 ஆம் திகதி அன்று கடமைக் காக சென்றிருந்த கொக்கிளாய் மேற்கு கிராம உத்தியோகத்தர் பெரும்பான்மையி னத்தைச் சேர்ந்த ஒருவரால் முகத்துவாரப் பகுதியில் தாக்கப்பட்டுள்ளார்.

தமது கள விஜயமாக சென்றிருந்த கிராம உத்தியோகத்தரும் அபிவிருத்தி உத்தியோகத்தரும் முகத்துவாரத்தில் அமைக்கப்படவிருந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத்திட்டம் தொடர் பாக பெரும்பான்மை இனத்தவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் கிராம உத்தியோ கத்தர் தாக்கப்பட்டு அவருடைய மோட்டார் சைக்கிள் திறப்பு பறிக்கப்பட்டு கடமை நாட்குறிப்பேடும் பறிக்கப்பட்டது. இது தொட ர்பாக முல்லைத்தீவு பொலி ஸில் கடந்த 15 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் கடந்த ஒரு வாரமாக எடுக்கவில்லை.

இது தொடர்பாக உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு விடயம் தெரியப்படுத்தப் பட்ட நிலையில் குறித்த நபரை கடந்த புதன்கிழமை பொலிஸார் கைதுசெய்துள் ளார்கள்.

இதேவேளை கரைதுறைப்பற்று பிரதே சத்திற்கு உட்பட்ட கிராம உத்தியோகத் தர்களை அழைத்த முல்லைத்தீவு பொலி ஸார் இருபகுதியினரையும் சமாதானப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட வேளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கிராம அலுவலகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை விடுவிக்கக் கோரி நேற்று முன்தினம் கொக்கிளாய் பகுதியில் இருந்து பெரும் பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் குறித்த நபரை முல்லைத் தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தியுள்ளார்கள்.

அரச உத்தியோகாத்தருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் குறித்த நபரை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (9-281)

# அரிசி ஆலை கூரையை கழற்றிச்சென்ற இராணுவத்தினர்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி வடக்கு பலநோ க்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசியாலைக் கூரை இராணுவத்தினரால் இரவோடு இரவாக கழற்றிச் செல்லப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் வை.எம்.சி.ஏ. கட்டடத்திற்கு அருகிலுள்ள கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அரிசியாலையின் கூரை நேற்று முன்தி னம் இரவு இராணுவத்தினரால் கழற்றிச் செல்லப்பட்டுள்ளது.

மேற்படி அரிசி ஆலை கடந்த யுத்தத் தினால் சேதமடைந்த நிலையில் அதன் கூரைகள் மட்டும் எஞ்சியிருந்தன.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசியாலைக் கூரையினை கழற்ற முற்பட்ட போது ஏற்ப ட்ட எதிர்ப்பினையடுத்து அதனை கைவிட் டுச் சென்ற இராணுவத்தினர் நேற்று முன் தினம் இரவு 7.55 மணியளவில் இர வோடு இரவாக மேற்படி அரிசி ஆலை யின் கூரையை கழற்றிச் சென்றுள்ள னர். (9-315)



# நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும்

## கிளி.விவசாயப்பணிப்பாளர்

வரட்சியை கருத்திற்கொண்டு சரியான நீர் முகாமைத்துவ த்தை பின்பற்றி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதன் மூலமே எதிர் காலத்தில் வெற்றியடைய முடியும் என மாவட்ட விவசாயப்பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த விவசாயிகளை கௌர விக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வட்டக்கச்சியில் அமைந்துள்ள விவசாயப்பண்ணையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரை யாற்றிய மாவட்ட பணிப்பாளர் கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவ சாயக்குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. தற்போது நாளுக்கு நாள் வரட்சி அதிகரித்துச்செல்கின்றது.

இந்த வரட்சிக்காலத்தில் நீர் முகாமைத்துவம் என்பது மிக முக்கியமானது. நீரை சிக்கன மாகப்பயன்படுத்தி விவசாயத்தை மேற் கொள்ள வேண்டும். அதன் மூலம் தான் நாங்கள் வெற்றிய டைய முடி யும். வீண் விரயமாகுதல், தேவைக்கு அதிகமாக நீரைப்பயன்படு த்துதல் என்பன தடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# மன்னாரில் தீயணைப்பு சேவை இல்லை

## பிரதமர் வாக்குறுதி அளித்தும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என நகரசபையில் குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னாரில் தீயணைப்புச் சேவை இல்லாத காரணத்தி னால் மன்னார் பகுதியில் தீ அனர்த்தம் ஏற்படும்போது பெரும் பாதிப்புக்களை மக்கள் எதிர்கொ ள்ளும் தன்மையே காணப்படு கின்றது.

மன்னாரில் தீயணைக்கும் பிரிவு அமைக்கப்படும் என பிர தமர் வாக்குறுதி அளித்தும் நிறை வேற்றப்படாது இருப்பது கவலை அளிப்பதாக மன்னார் நகரசபை உறுப்பினர் மைக்கல் கொலின் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நகரசபையின் மாதா ந்த அமர்வு நடைபெற்றது.

அப்பொழுது மன்னார் நகர சபை பகுதியில் வீடு ஒன்று எரி ந்து கொண்டிருப்பதாகவும் அதை உடனடியாக அணைக்க முடியாத காரணத்தால் அவ்வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்போது தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் உறுப்பினரான மைக் கல் கொலின் கருத்துத் தெரிவிக் கையில்,

இந்த வருட ஆரம்பத்தில் எமது நாட்டின் பிரதமர் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்து மன்னார் மாவட்டத்தின் அபிவி ருத்தி தொடர்பான கலந்துரை யாடலின்போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் வேண்டுகோளு க்கிணங்க விரைவில் மன்னா ரில் தீயணைக்கும் பிரிவு அமைக் கப்படும் என உத்தரவாதம் வழ ங்கியிருந்தார்.

ஆனால் இதுவரையில் அதற் கான நடவடிக்கைகள் எடுத்ததாக எமக்குத் தெரியவில்லை.

மன்னாரில் அடிக்கடி தீ அனர் த்தங்கள் ஏற்படுகிறது. ஆகவே இச் சபையினூடாக மன்னாரில் தீயணைக்கும் பிரிவு ஒன்றை விரைவில் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டிய அவ சியம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். குறித்த விடயம் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (9-285)

# வவு. நகர சபைத்தலைவர் தனது கையாலாகாத்தன்மையை மறைக்கவே போராட்டம் நடத்துகின்றார்

## எதிர்க்கட்சித் தலைவர் நா.சேனாதிராசா

வவுனியா நகரசபைத் தலை வர் தனது கையாலாகாத் தன் மையை மறைக்கவே போராட் டம் நடத்துகின்றார் என நகர சபை எதிர்க்கட்சிக் குழுவின் தலைவர் நா.சேனாதிராசா தெரி வித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் அறிக் கையில் அவர் மேலும் தெரிவி க்கையில்,

வவுனியா நகரசபையின் தலை வர் தனது வீட்டிலிருந்து குப்பை ஏற்றும் டிராக்டரில் அலுவலகத் திற்கு வந்ததாகவும் வடமாகா ணசபை உத்தியோகத்தர்கள் வேண்டும் என்றே வவுனியா நகரசபையை புறக்கணித்ததா கவும் பத்திரிகைகளில் ஒரு பேட் டியை வழங்கியுள்ளார்.

இது முதல் முறையல்ல. முன் பும் ஒரு முறை வவுனியா கச்சே ரிக்கு இப்படி குப்பை ஏற்றும் டிரா க்டர் வண்டியில் பிரயாணம் செய்து தன்னைப் பிரபலப்படுத்த முயன்றுள்ளார்.

வடமாகாணத்திலேயே அதிக வளங்களைக் கொண்ட ஒரு நகரசபை வவுனியா நகரசபை ஆகும். ஏராளமான வேறு வகை யான வாகனங்களுடன் இரண்டு பிக்கப், நான்கு பஸ் வண்டிகள் இரு அம்புலன்ஸ் ஆகியன இங்கே இருக்கின்றன. இவ் வளங்க ளைக் கொண்டு நல்ல நிர்வா கத்தைச் செய்ய முடியாத தலை வர் தனது கையாலாகாத்தன த்தை மறைக்க இவ்வாறு தன்னை ஈடுபடுத்திக் கொள்வது எமது நகரசபைக்கும் உறுப்பினர்களு க்கும் வரியிறுப்பாளர்களுக்கும் எம்மைத் தெரிவு செய்த வாக்கா ளர்கள் மற்றும் நகரசபை உத் தியோகத்தர்களுக்கும் அவமா னமான ஒரு நிகழ்வாகும். இவரது கவனயீர்ப்பு போராட்டத்தின் மூலம் வடமாகாண உள்ளூராட்சி ஆணை யாளர், மாகாண ஆளுநர் ஆகி யோரைப் பகைத்துக் கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.

இது எமது சபையின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நல்லதல்ல. வவுனியா நகரசபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவதற் கும் வடமாகாணசபை அதிகாரி கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். நான் அறிந்தவரை வடமாகாண சபை அதிகாரிகள் தரம் உயர்த் துவதற்கு சாதகமான அறிக்கை களை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். இனி அது கிடைப்பதும் கிடைக்கா ததும் அரசியல்வாதிகளின் கைக ளிலே தங்கியுள்ளது.


வன்னிப்பாராளுமன்ற உறுப் பினர்களின் தொடர் நடவடிக்கை மூலமே இது சாத்தியமாகும்.

ஆகவே வாக்காளர்களுக்கும் வரியிறுப்பாளர்களுக்கும் உண்மை நிலையைத் தெரியப்படுத்த வேண் டிய பொறுப்பு எதிர்க்கட்சி உறுப் பினர்களின் குழுவின் தலைவர் என்ற வகையில் எனக்கு இருக் கிறது என்பதைத் தெரியப்படுத்து கின்றேன் என மேலும் தெரிவித் துள்ளார். (9-250)

# பாரதம்

# எடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி உள்ளோம்

## மு.க.ஸ்ராலின் பெருமிதம்



(சென்னை)

'எடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி உள்ளோம்' என்று தொண்டர்கள் மத்தியில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் பெருமிதம் அடைந்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றதை அடுத்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின், மெரினாவிலுள்ள கருணாநிதி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர், தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்துக்குச் சென்று, அங்கு திரண்டிருந்த தொண்டர்கள் மத்தியில நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

"நாம் என்ன எதிர்பார்த்தோமோ அந்த வெற்றியை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய வாக்காளர்களுக்கும், மக்களுக்கும் நன்றி. அதேபோல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இருந்து பணியாற்றிய கூட்டணி கட்சி தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி. இந்த வெற்றியைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நாம் களத்தில் இறங்குகின்ற நேரத்திலேயே ஒரு உறுதி எடுத்துக் கொண்டோம்.

கருணாநிதி இல்லாமல் நடைபெற்ற இந்த தேர்தலில் எப்படி தேர்தல் களத்தில் இறங்கப்போகின்றோம்? எப்படி இந்த களத்தை சந்திக்கப் போகின்றோம்? என்ற தவிப்பு இருந்தது.

கருணாநிதி நம்முடன் இருந்திருந்தால் என்னென்ன பயிற்சியை, என்னென்ன தேர்தல் பணி முறைகளை, என்னென்ன பாடங்களை நமக்கு கற்றுத் தந்திருப்பாரோ, அவற்றையெல்லாம் நாம் ஏற்கனவே அவரிடத்திலிருந்து கற்றுக் கொண்ட காரணத்தினால், அவர் வழியில் நாம் பாடுபட்டு பணியாற்றி வெற்றி பெற்று இருக்கிறோம். அது மட்டுமல்ல இந்த வெற்றியை அவருடைய நினைவிடத்துக்குச் சென்று அவருக்கு நாம் வெற்றி மாலையை சமர்ப்பிப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்டிருந்தோம். அதை நிறைவேற்றியுள்ளோம்.

அந்த உறுதியை நிறைவேற்றக்கூடிய ஒரு நிலையை மக்கள் ஏற்படுத்தித் தந்துள்ளனர். சட்டமன்ற இடைத்தேர்தலைப் பொறுத்தவரையில் இன்னும் சில தொகுதிகளில் வாக்கு வித்தியாசத்தை பொறுத்தவரையில் இழுபறி நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் தங்களுடைய ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்று கருதி, ஏதேனும் அதில் சூழ்ச்சி செய்யலாமா? சதி வலை பின்னலாமா? என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே அதை அறிந்து, புரிந்து அதற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது என்று தேர்தல் கமிஷனில் முறையிட்டு இருக்கிறோம். நிச்சயமாக அது நடக்காது என்று கருதுகிறோம். ஒரு மிகப்பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம். ஒரே ஒரு கவலை, கருணாநிதி இருந்து இதனை பார்க்கவில்லையே என்ற அந்த கவலை தான் என்னை வாட்டிக் கொண்டிருக்கின்றது.


இருந்தாலும் கருணாநிதி சிலைக்கு முன்பும், அவரை உருவாக்கிய அறிஞர் அண்ணாவின் சிலைக்கு முன்பும் வெற்றி பெற்றிருக்கக்கூடிய நம்முடைய வேட்பாளர்களுக்கும் கூட்டணி கட்சியின் வேட்பாளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை தி.மு.க. சார்பில் தெரிவித்து கொள்கிறேன்" என மு.க.ஸ்ராலின் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# காந்திநகர் தொகுதியில் அமித்ஷா அபார வெற்றி

(காந்திநகர்)

காந்திநகர் தொகுதியில் அமித்ஷா 5.57 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். பா.ஜனதா தேசிய தலைவர் அமித்ஷா, குஜராத்தின் காந்திநகர் தொகுதியில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் சவ்டா களமிறங்கினார்.

இந்த தொகுதியில் அமித்ஷா 8.94 இலட்சம் வாக்குகள் பெற்றார். காங்கிரஸ் வேட்பாளர் சவ்டாவுக்கு 3.37 இலட்சம் வாக்குகளே கிடைத்தன. இதன்மூலம் பா.ஜனதா தலைவர் அமித்ஷா 5.57 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். (7)



# அமேதிக்கு புதிய விடியல் தோன்றியுள்ளது

## வெற்றிக்களிப்பில் ஸ்மிருதி ட்வீட்

(அமேதி)

இந்த நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக அமேதிக்கு புதிய விடியல் தோன்றியுள்ளதாக பா.ஜ.க. சார்பாக போட்டியிட்ட ஸ்மிருதி இரானி ட்வீட் தெரிவித்துள்ளார்.


ஸ்மிருதி இரானி ட்வீட், தனது டுவிட்டர் பக்கத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் கூறியுள்ளதாவது, "இது அமேதிக்கு ஒரு புதிய காலை. புதிய தீர்மானம் நன்றி அமேதி என மரியாதையை செலுத்திக்கொள்கிறேன்.

அத்துடன் எங்கள் மீது நம்பிக்கை கொண்டு தாமரையை மலரச் செய்திருக்கும் அமேதிக்கு நன்றி" என தனது டுவிட்டர் பக்கத்தில் ஸ்மிருதி இரானி ட்வீட் பதிவேற்றியுள்ளார்.



அமேதி தொகுதியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை தோல்வியடையச் செய்து 55,120 வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்மிருதி இரானி ட்வீட் வெற்றியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## வெற்றி, தோல்வி இயல்பானது-தினகரன்



(சென்னை)

நாடாளுமன்ற தேர்தல் மற்றும் தமிழக சட்டசபை இடைத்தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இந்த தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தோல்வியைச் சந்தித்துள்ளது. இது குறித்து அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் 'டுவிட்டரில்' பதிவுகளை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டசபை இடைத் தேர்தல்களில் தமிழக மக்கள் அளித்த தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம். தேர்தல் அரசியலில் வெற்றி-தோல்வி என்பது இயல்பானது.

எத்தனையோ இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் இடையே கழகம் காக்க மக்கள் பணியாற்ற சுயேட்சைகளாக களமிறங்கியவர்களுக்கும் கழகத்திற்கு வாக்களித்து ஆதரவளித்த நல்ல உள்ளங்களுக்கும், நன்றிகளை காணிக்கையாக்குகிறேன். (7)

போதைப்பொ

# குழுக்களிடை
# பத்துப்பேர்

(மெக்சிக்கோ)

மெக்சிகோவின் மேற்கு பகு
யில் நேற்றைய தினம் குழுக்
ளிடையே இடம்பெற்ற துப்பா
கிச்சூட்டில் பத்து பேர் உயிரிழ
ததுடன், மூவர் படுகாயமடை
துள்ளனர்.

குடியிருப்பாளர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தில் பயன்படுத்தப்படும் வகையிலான ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

சுமார் ஒரு மணிநேரம் வரை இந்த துப்பாக்கிச்சூடு நீடித்ததாக அப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியத் தேர்
# எங்களுக்கு நம்

## அமெ.வெளிய

(வோஷிங்டன்)

இந்திய தேர்தல்களின் நியாயத்தன்மை மற்றும் நேர்மை குறித்து தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்திய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

இதையொட்டி இந்திய தேர்தல்களின் நியாயத் தன்மை மற்றும் நேர்மை குறித்து தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர்

# ரேபரேலி தொகுதி
# ஒன்றரை இலட்ச
# வித்தியாசத்தி



(லக்னோ)

ரேபரேலி தொகுதியில் சோனியா காந்தி 1 1/2 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

# வெளிநாடு

ருப்பொருள் கடத்தல் விவகாரம்

## டையே துப்பாக்கிச்சூடு
## ர் பரிதாபமாகப் பலி

ர பகுதி
தமுக்க
துப்பாக்
யிரிழந்
மடைந்



லுக்கு
ஸார்
கை
ப்பாக்
ர்கள்

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பகுதியிலிருந்து ஒன்பது பேரது சடலங்களைப் பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலுக்கான மார்க்கங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கில் அப்பகுதியில் தொடர்ந்து குழு மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## தேவையான இடங்களில் வெற்றி பெற்றதால் அ.தி.மு.க. ஆட்சிக்கு ஆபத்தில்லை

தமிழகத்தில் இடைத் தேர்தல் பரபரப்பு முடிவுக்கு வந்துள்ளது. தேவையான இடங்களை கைப்பற்றியதால் அ.தி.மு.க.அரசு ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது. தமிழகத்தில் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.க. 134 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக்கொண்டது. ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றார். எதிர்த்து நின்ற தி.மு.க.கூட்டணி 98 இடங்களைப் பிடித்தது.

இந்த நிலையில், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட்டு கட்சி இரண்டாக உடைந்தது. டி.டி.வி.தினகரனுக்கு ஆதரவாக செயற்பட்ட 18 அ.தி.மு.க.எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

18 சட்டமன்ற தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், திருவாரூர் எம்.எல்.ஏ.கருணாநிதி, சூலூர் எம்.எல்.ஏ.கனகராஜ், திருப்பரங்குன்றம் எம்.எல்.ஏ.ஏ.கே.போஸ் ஆகியோர் மரணமடைந்ததால், அந்த தொகுதிகளும் காலியான தொகுதிகள் பட்டியலில் இணைந்தது. இதற்கிடையே ஓசூர் தொகுதி அ.தி.மு.க.எம்.எல்.ஏ.வும், விளையாட்டுத்துறை அமைச்சராகவும் இருந்த பாலகிருஷ்ணரெட்டி, குற்ற வழக்கு ஒன்றில் சிக்கியதால் பதவியை இழந்தார். இதனால், தமிழகத்தில் காலியான தொகுதிகள் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்தது.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுடன் இந்த 22 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தல் முடிவு மத்தியில் ஆட்சியை நிர்ணயிப்பதாக இருந்தாலும் 22 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவு தமிழகத்தில் ஆட்சியை நீடிக்கச் செய்யுமா? அல்லது கவிழ்க்குமா? என்ற நிலையில் இருந்தது. இதனால், தமிழக ஆட்சியாளர்கள் நாடாளுமன்ற தேர்தலைவிட, சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவையே பெரிதும் எதிர்பார்த்தனர்.

இறுதியில் அ.தி.மு.க. 9 இடங்களை கைப்பற்றி ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது. கட்சி நிர்வாகிகளும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். சட்டசபையில் தற்போது அ.தி.மு.க.வின் பலம் பெரும்பான்மைக்கு தேவையான அளவுக்குவுள்ளது. 13 இடங்களை தி.மு.க. கைப்பற்றிய போதும் ஆட்சிக்கு இடையூறு ஏற்படுத்த முடியவில்லை. என்றாலும், சட்டமன்றத்தில் 110 எம்.எல்.ஏ.க்களுடன் வலுவான எதிர்க்கட்சியாக உருவெடுத்துள்ளது.(7)

## ர்தலின் நேர்மை குறித்து
## நம்பிக்கை கிடைத்துள்ளது
### ளியுறவுத்துறை தெரிவிப்பு

மோர்கன் ஆர்டகஸ் கூறுகையில், "அமெரிக்காவின் கண்ணோட்டத்தில் இருந்து நான் கூறுவது என்னவென்றால், இந்தியத் தேர்தல்களின் நேர்மையில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளது.

இந்தத் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் அவர்களுடன் சேர்ந்து நாங்கள் பணியாற்றுவோம்" எனத் தெரிவித்த அவர், "மற்ற நாடுகளுக்கு அனுப்புவது போல் இந்தியாவுக்கு தேர்தல் பார்வையாளர்களை நாங்கள் அனுப்புவதில்லை. ஏனெனில் இந்தியத் தேர்தல் ஆணையம் மிகவும் சுதந்திரமாகச் செயற்படுகிறது.

நாங்கள் இந்திய அரசுடன் வலுவான உறவுகளை வைத்திருக்கிறோம். அனைத்து விவகாரங்களிலும் இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம்"

அத்துடன், "மனித வரலாற்றிலேயே ஜனநாயகத்தின் மிகப் பெரிய திருவிழாவாக இந்தியத் தேர்தல் விளங்குவதாக சிலர் என்னிடம் தெரிவித்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அற்புதத் திருவிழாவை மக்கள் அமைதியுடன் நடத்திக் கொடுப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதற்காக இந்திய மக்களை நாங்கள் பாராட்டுகிறோம்" என மேலும் அவர் தெரிவித்தார். (7)

## அமெரிக்க தடைகளை எதிர்கொள்ளத் தயார்

### துருக்கி அறிவிப்பு

(அங்காரா)

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை சமாளிப்பதற்கு தயாராகி வருவதாக துருக்கி அறிவித்துள்ளது. துருக்கி பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவிடமிருந்து எஸ் 400 ரக ஏவுகணைகளை கொள்வனவு செய்ததானது துருக்கியின் பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காகவே தவிர யாரையும் அச்சுறுத்தும் முயற்சி அல்ல என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி ரஷ்யாவிடமிருந்து எஸ் 400 ரக ஏவுகணைகளை



துருக்கி கொள்வனவு செய்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் பொருளாதாரத் தடை சட்டத்தின் கீழ் அங்காரா பொருளாதார தடைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என வோஷிங்டன் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)


## தியில் சோனியா
## ட்சம் வாக்குகள்
## ந்தில் வெற்றி

உத்தர பிரதேச மாநிலம் ரேபரேலி நாடாளுமன்ற தொகுதியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தி போட்டியிட்டார். அவருக்கு ஆதரவாக பகுஜன் சமாஜ்-சமாஜ்வாடி கட்சி வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

சோனியா காந்தி தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் தினேஷ் பிரதாப் சிங்கை 1 இலட்சத்து 67 ஆயிரத்து 178 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றியைத் தக்கவைத்தார்.

சோனியா காந்தி 5 இலட்சத்து 34 ஆயிரத்து 918 வாக்குகள், தினேஷ் பிரதாப் சிங் 3 இலட்சத்து 67 ஆயிரத்து 740 வாக்குகளும் பெற்றனர். கடந்த தேர்தலில் சோனியா காந்தி 3 இலட்சத்து 52 ஆயிரத்து 713 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## முதல்வர் பதவியை இராஜினாமா செய்த சந்திரபாபு நாயுடு



(அமராவதி)

ஆந்திர மாநில சட்டசபை தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி மிகப்பெரிய பின்னடைவை சந்தித்த நிலையில் முதல்வர் சந்திரபாபு நாயுடு தனது இராஜினாமா கடிதத்தை ஆளுநரிடம் அளித்தார்.

ஆந்திர மாநில சட்டசபை தேர்தலில் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான வை. ஆர். எஸ்.காங்கிரஸ் வேட்பாளர்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். அம்மாநிலத்தை ஆளும் தெலுங்கு தேசம் கட்சி மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஆளுநர் நரசிம்மனை சந்தித்த முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தனது இராஜினாமா கடிதத்தை அவரிடம் ஒப்படைத்தார்.

ஆந்திராவின் முதலமைச்சராக பதவியேற்கும் ஜெகன் மோகன் ரெட்டி மற்றும் ஒடிசா முதலமைச்சராக மீண்டும் பதவி யேற்கவுள்ள நவீன் பட் நாயக் ஆகியோருக்கு அவர் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார். (7)

## தேர்தல் தோல்வியால் ஏமாற்றம் இல்லை




தேர்தல் தோல்வியால் எங்களுக்கு ஏமாற்றம் எதுவும் இல்லை என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார். மக்களவைத் தேர்தல், தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் தோல்வியை சந்தித்தது. இந்த நிலையில், நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த கமல்ஹாசன்பேசியதாவது, வெற்றி பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

- எதிர்பார்த்ததை விட அதிகமான வாக்குகளை மக்கள் எங்களுக்களித்துள்ளனர். வாக்களித்த மக்களுக்கு நன்றி. மக்களுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தொடர்ந்து செயலாற்றுவோம். நல்ல வழியில் தான் நாங்கள் போய்க்கொண்டிருக்கிறோம்.

பா.ஜ.கவின் வெற்றி தமிழக மக்களின் தீர்ப்பு அல்ல, 14 மாதத்தில் எங்களால் என்ன முடியுமோ, அதை செய்துள்ளோம். தேர்தல் தோல்வியால் எங்களுக்கு ஏமாற்றம் இல்லை என திடமாகத் தெரிவித்துள்ளார். (7)

# நாடு தொடர்பாக நான் கூறியவை அனைத்தும் உண்மையாகிவிட்டது

## கவலையுடன் ஞானசார தேரர்





(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து கிடைத்த உத்தரவுக்கு அமைய ஞானசார தேரர் விடுதலை செய்யப்பட்டார் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தென்னக்கோன் நேற்று முன்தினம் மாலை தெரிவித்தார்.

6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வெளியேறிய ஞானசார தேரரை வாயிலில் பெருமளவு பௌத்த பிக்குகள் மற்றும் பொதுமக்கள் வரவேற்றனர்.

பின்னர் அவர் கோட்டே சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகா சங்க சபா சியாம் மகா நிக்காயவின் தலைமை குருவான வண இட்டபன தம்மாலங்கார தேரரைச் சந்தித்தார்.

சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஞானசார தேரர்,

"இப்போது மிகவும் களைப்படைந்துள்ளேன். நாடு தொடர்பாக நான் கூறியவை அனைத்தும் உண்மையாகி விட்டது. அது தொடர்பில் கவலையடைகின்றேன்.

எதிர்வரும் நாட்களில் பிரித், தியானம் உள்ளிட்ட ஆன்மீகத்திலேயே என் வாழ்க்கையை கழிக்கலாம் எனத் தீர்மானித்துள்ளேன்" என்று தெரிவித்தார். (இ-7)

# பாப்பரசரின் பிரதிநிதியை சந்தித்த பிரதமர்



(கொழும்பு)

பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையின் விசேட பிரதிநிதி வத்திக்கானின் கார்டினல் வணக்கத்திற்குரிய பெர்னாண்டோ பிலோனி ஆண்டகைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள வத்திக்கான் தூதரகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் குறித்தும் நாட்டின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் பேராயர் பியரே சுயன்வன்ட்டொட்டு ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

# மோடிக்கு சம்பந்தன் வாழ்த்து நெருங்கிப் பணியாற்ற விருப்பம்



(கொழும்பு)

இந்தியப் பிரதமராக மீண்டும் பதவியேற்கும் நரேந்திர மோடியுடன் மிகவும் நெருங்கமாகச் செயலாற்றி, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆவலாக இருப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. பெருவெற்றி பெற்றுள்ள நிலையில், இரண்டாவது முறையாகவும் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ளார்.

அவருக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

இந்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இந்தியப் பிரதமர் மோடிக்கு நேற்று முன்தினம் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதில், "இந்திய மக்களுக்கு தொடர்ந்தும் அயராது சேவையாற்றும் தாங்களுக்கும் தாங்கள் அரசாங்கத்திற்கும் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் ஆண்டுகளில் தங்களின் தலைமைத்துவத்தின் கீழ் பல மைல் கற்களை நீங்களும் இந்திய மக்களும் அடைய நாம் பிரார்த்தனை செய்கின்றோம்.

இத்தருணத்தில் இலங்கை மக்களுக்கு, குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு, தங்களது அரசும் இந்தியாவும் நல்கிய அனைத்து உதவிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வருங்காலங்களில், இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நிறைவான, நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான ஒரு நிரந்தரத் தீர்வை எட்டும் முகமாகவும் தெற்காசிய பிராந்தியத்தின் சமாதான முன்னேற்றத்தையும் உறுதித்தன்மையையும் நிலைநாட்டும் முகமாகவும் மிக நெருங்கிச் செயலாற்ற ஆவலாகவுள்ளோம்.

மீண்டுமொருமுறை தமிழ் பேசும் மக்களின் சார்பில், உயரிய பதவியில் நீங்கள் திறம்பட செயலாற்ற எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நம்பிக்கை

அந்த ஆள் மிகவும் நல்லவன் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன் சேர். கடைசி நேரத்தில் காலைவாரி விட்டான் என்று கூறி அலுத்துக் கொள்ளுகின்றவர்கள் பல பேர் உண்டு இந்த உலகத்தில்.

ஒருவனை நல்லவன் என்று நம்பிக் கொண்டிருந்து அவன் வேறு விதமாக நடந்து கொண்டால் நமக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விடும்.

அதேபோல் குறை நம்பிக்கையும் உண்டு. இந்த உலகத்திலே எதையும் நல்லவிதமாக எடுத்துக் கொள்கின்றவர்களும் உண்டு. கெட்ட விதமாக எடுத்துக் கொள்கின்றவர்களும் உண்டு.

நீங்கள் எந்த கலர் கண்ணாடியை மாட்டியிருக்கின்றீர்களோ அதே கலராகத்தான் இந்த உலகமும் தெரியும் என்று சொல்கின்றார்களே, அது இதைத்தான்.

புத்தருடைய சீடர் ஒருவர் இருந்தார். அந்த புத்த பிக்கு தீட்சை வாங்கிக் கொண்டு தர்ம பிரசாரத்திற்காக வெளியூர் புறப்படுவதற்கு இருந்தார். அந்த நேரத்திலே புத்தர் அந்தச் சீடரை அழைத்து விசாரித்தார்.

நீ எந்த பிரதேசத்திலே தர்ம யாத்திரை செய்யப் போகின்றாய்? என்றார்.

சுவாமி! நான் சூனா பராந்தகம் என்னும் பிரதேசத்தில் தர்ம பிரசாரம் செய்யப் போகின்றேன் என்றார் அவர்.

அந்தப் பகுதியிலே உள்ள சனங்கள் உன்னைத் திட்டினால் நீ என்ன செய்வாய்? என்று கேட்டார்.

நான் சந்தோசப்படுவேன்! என்றார் அவர்.

ஏன்? என்று கேட்டார் புத்தர்.

நல்ல வேளை அவர்கள் திட்டுகின்றதோடு விட்டார்களே... அடிக்கலையே. அதனால் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நினைப்பேன்! என்றார்.

சரி! அவர்கள் உன்னை அடிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்... அப்ப என்ன செய்வாய்? என்றார்.

அடடா! இவர்கள் எவ்வளவு நல்லவர்கள். ஆயுதத்தாலே தாக்காமல் இப்படி வெறும் கையால் அடிக்கின்றதோடு நிறுத்தி விட்டார்களே என்று நினைத்து சந்தோசப்படுவேன்! என்றார்.

சரி! ஆயுதத்தாலேயே உன்னை அவர்கள் தாக்கினார்கள் என்றால் அப்போது என்ன நினைப்பாய்? என்று கேட்டார்.

ஆகா! இவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கின்றார்கள். பிறவி என்கின்ற தளையிலேயிருந்து விடுபட இந்த உலகத்திலே ஒவ்வொருத்தரும் என்ன பாடுபட்டிருக்கின்றார்கள்? ஆனால் நான் மிகவும் சுலபமாக முக்தியடைவதற்கு இவர்கள் உதவி செய்கின்றார்களே! இவர்களை எவ்வளவு போற்றினாலும் போதாது! என்று நினைத்து சந்தோசப்படுவேன்! என்றார் அந்தச் சீடர்.

உடனே புத்தர் பார்த்தார். அந்தச் சீடரை மனப்பூர்வமாக வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். இப்ப இந்த சீடர் மனோநிலையை நீங்கள் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர் பார்வையில் இந்த உலகத்திலே எல்லோருமே நல்லவர்கள் தான். அந்த அளவிற்கு பக்குவம் ஏற்பட்டு போய் விட்டது அவருக்கு!

சில பேர் பார்வையிலே வேற மாதிரி இருக்கின்றது. அடுத்தவர்கள் நல்லது செய்தால் கூட அதை நல்ல விதமாக எடுத்துக் கொள்ளத் தெரியாது இவர்களுக்கு!

ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு தெரிந்த ஒருவர் ஒரு நாள் அவரைத் தேடி வந்தார். ஒரு 50 ரூபாய் இருந்தால் கொடுங்க! அடுத்த திங்கட்கிழமையன்று திருப்பிக் கொடுத்து விடுகின்றேன் என்றார். அவர் திருப்பிக் கொடுப்பார் என்று நம்பிக்கை இல்லை. இருந்தாலும் கொடுத்தார்.

ஆனால் அந்த ஆள் சொன்னபடியே அடுத்த திங்கட்கிழமை திருப்பிக் கொடுத்து விட்டுப் போனார். ஒரு மாதம் கழித்து அதே ஆள் மறுபடியும் இவரிடம் வந்தார். ஐயா! ஒரு ஐம்பது ரூபாய் கடன் வேண்டும் என்றார். உன்னை நம்பிப் பணம் கொடுக்க முடியாது என்றார் கோபமாக!

என்னங்க இது? போன தடவை கூட சொன்னபடி கொடுத்தேன். என்னை நம்ப முடியாது என்று சொல்றீங்களே! என்றார்.

ஆமாம் போன தடவை உன்னிடம் நான் பணம் கொடுத்த போது அதை நீ திருப்பிக் கொடுக்க மாட்டாய் என்று மனப்பூர்வமாக நம்பினேன். ஆனால் நீ அந்த நம்பிக்கையை பொய்யாக்கி விட்டாய். என் நம்பிக்கையை நாசமாக்கின உன்னை மறுபடியும் எப்படி நம்புவது? போயிட்டு வா! என்றார்.

இப்படி ஒரு நிலைமை வந்துவிடக் கூடாது என்பதுக்கு தான் இந்த காலத்திலே பலபேர் ஒருத்தரிடம் ஒரு தடவை கடன் வாங்கிவிட்டால் அடுத்த தடவை அவர் முகத்திலே முழிக்கிறதே இல்லை!

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–173

## (குழாய்க்) கிணறு தோண்ட எரிகுழம்பு (பூதம்?) வந்ததெப்படி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இன்றைய செய்திமிகவும் முக்கியமானது. தண்ணீர் பெறுவதற்காக குழாய்க் கிணறு (Tube well) தோண்டிய போது பூமிக்குள் இருக்கும் எரிகுழம்பு (Larva) வெளிவந்த செய்தி கேட்டு மனம் பதைபதைக்கின்றது. இது நடந்தது அண்டைய நாடான இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் என்றால் நம்புவீர்களா? பாரியளவிலான பயிர்ச்செய்கைக்காகவும் தொழிற்சாலையை நிறுவுவதற்குமாகவும் அவற்றுக்கான தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குழாய்க் கிணறு தோண்டும் பாரிய இயந்திரத்தைப் பயன்படுத்தி குழாய்க் கிணறினைத் தோண்டிக்கொண்டிருந்த போது குறிப்பிட்ட ஆழத்தில் நீர் அதிகளவில் வெளிவராததால்மேலும் அதனை தோண்டியிருக்கின்றனர்.

ஏறக்குறைய 1200 அடிக்கு (ஏறக்குறைய 400 மீற்றர்கள்) தோண்டிய போது திடீரென அதனூடாக நீர் வருவதற்குப் பதிலாக பூமிக் குழம்பான எரிகுழம்பு வெளிவந்திருக்கின்றது. வெளிவந்தது மட்டுமல்லாமல் குழாய்க்கிணறு தோண்டுவதற்கு பயன்படுத்திய பாரிய இயந்திரத்தை எரித்து அதுவும் சாம்பராகி விட்டது. இது தொடர்பான காட்சிகள் வெளிவந்திருக்கின்ற நிலையில் இந்த செய்தி எமக்கு மிகவும் முக்கியமானதாக எதிர்காலத்தைப் பொறுத்து பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 187

நீருக்காக தோண்டப்பட்ட கிணற்றில் குறைந்தளவே நிலத்தடி நீர் இருந்திருக்கின்றது. அவ்வாறாயின் பூமியின் மையத்தை நோக்கிய அறிவும் தெளிவும் குழாய்க்கிணறு தோண்டியவர்களுக்கும் அதனை நெறிப்படுத்தும் கண்காணிப்பவர்களுக்கும் இருத்தல் வேண்டும். தவறின் மேற்கூறியவாறு விடயம் விபரீதமாக மாறிவிடும். குழாய்க் கிணறு தோண்டுவதற்காக எவராவது விண்ணப்பிக்கும் போது அதற்கான அனுமதியை வழங்கும் நடைமுறை பல இடங்களில் இருப்பதும் சில இடங்களில் இல்லாதிருப்பதுவுமாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை அவசியமாக்கப்படல் வேண்டும். குழாய்க் கிணறு தோண்டுகின்ற இடம் பற்றிய பூகோள மற்றும் அந்த நிலஞ் சார்ந்த புவியியல் விடயங்கள் அது சார்ந்த புலமையாளர்களிடம் பெறப்பட்டு பின்னர் அனுமதி வழங்கப்படல் அவசியம் என்பதனை குழாய்க் கிணறிலிருந்து எரிகுழம்பு வெளிவந்ததிலிருந்து கவனிக்க வேண்டியதாகிறது.

இது ஒரு சாதாரண விடயமல்ல. வழக்கமாக எரிமலை வெடிக்கின்ற இடங்களிலேயே எரிகுழம்பு வெளிக்கக்கும். அதிக வெப்பத்துடன் இருக்கும் இவ் எரி குழம்பு ஆறாக ஓடுகின்றதனையும் அவதானிக்கலாம். ஆனால் குழாய்க்கிணறு தோண்டிய போது எரிகுழம்பு வெளிவந்ததென்பது விசித்திரமானதாக தோன்றினாலும் அதற்குள்ளாக பாரியளவிலான ஆபத்து இருக்கின்றதென்பதனையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இது பற்றிய தேடல் இன்னும் அவசியமானதாகும். எமது பிரதேசத்தில் எரிமலை என எதுவுமே இதுவரை வெடித்ததில்லை. ஆயினும் மனிதனின் நடவடிக்கைகளும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும் கவனத்தில் கொண்டால் எதுவும் நடக்காது என வெறுமனே நாம் இருக்க முடியாது. எமது மக்களுக்கும் இது விடயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது தலையாய கடமை என எண்ணியதால் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

நீர்த்தேவை என்பது அனைவருக்கும் மிக முக்கியமானதாக இருப்பதனை உணரலாம். நீரின்றி இவ்வுலகமேது? என்பதிலிருந்து நீரின் அவசியம் வெகுவாக உணரப்பட்டிருந்த நிலையில் நிலத்தடி நீரிலிருந்து இந்நீரினைப் பெறுவதற்கு பல இடங்களில் குழாய்க் கிணறு தோண்டப்படுவதையும் அதன் மூலம் அதிகளவிலான நீர் வெளியேற்றப்படுவதனையும் காணலாம். பலவிடங்களில் நீர் அளவுக்கதிகமாக பெறப்படுவதனையும் இலவசமாக கிடைப்பதனால் எவ்வளவையும் பெறலாம் என்னும் எண்ணப்பாடும் அதில் எந்தவிதமான கரிசனையும் காட்டத்தேவையில்லை என்னும் அனுமானமும் மக்களிடையே இருப்பதாக அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீர் என்பது நன்னீராக சுண்ணாம்புக் கற்பாறைகளுக்கிடையில் (Lime stone) சேமித்திருக்கக் கூடிய நீர் வில்லையிலேயே (Water lens) தங்கியிருக்கின்றது. அளவுக்கதிகமாக நீர் குழாய்க்கிணறின் மூலம் அவசரமாக வெளியேற்றப்பட்டால் இருக்கின்ற நன்னீர் போக அங்கே மேலதிகமான நன்னீர் வருவதற்குள்ளாக (before recharge) ஆழமான பகுதியிலிருந்து உவர்நீர் வந்து சேர்ந்து விடும். ஒரு விவசாய கிணற்றிலிருந்து ஒரே நேரத்தில் ஐந்து குழாய்களைப் பொருத்தி அருகிலுள்ள வயல் நிலங்களுக்கு போட்டியாக நீரை ஒரே நேரத்தில் பாய்ச்சுவதனை கவனிக்கலாம்.




அந்த போட்டி எதற்கு? அந்த ஐந்து போரும் கூடிக்கதைத்து வேறுவேறு நேரத்தில் தங்களுடைய தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவார்களாயின் அந்த விவசாயக் கிணற்றினை அப்படியே நல்ல நீரினுடன் இருக்க விட முடியும். தவறினால் விரைந்து உவர்நீராகும் நிலையை தோற்றுவித்தால் பின்னர் அந்தகுழாய்க் கிணறு உவர் நீராக மாறிவிடும் என்பதனையும் அதிலிருந்து பின்னர் நீரை பாய்ச்ச முடியாது என்பதனையும் நாம் எல்லோரும் கவனிக்கத் தவறக்கூடாது.

பல நேரங்களில் கூடிக்கதைத்து தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை ஒருவருக்கொருவர் மல்லுக்கட்டி விபரீதத்தை விலைக்கு வாங்குவதனை காணலாம். அதுதான் இங்கும் நடக்கின்றது என்றாலும் தண்ணீர் விடயத்திலாவது விட்டுக்கொடுங்களேன். தண்ணீர் இல்லையென்று மறுத்த தேசங்கள் அழிந்த வரலாறுகள் பலவுண்டு. தாவரங்களுக்கோ, விலங்குகளுக்கோ இன்னும் மனிதருக்கோ தவித்த வாய்க்கு தண்ணீர் இல்லையென்றால் அவர்கள் மனிதர்களேயில்லை. மனிதம் அங்கு வாழவும் இல்லை.

நன்னீர் கிணறுகளை உவர் நீராக்கும் நிலையை எம்மவர்களால் வலிந்து ஏற்படுத்தப்பட்ட விளைவாகவே கருத வேண்டும். இந்த அடிப்படை அறிவு அனைத்து மக்களுக்கும் இருக்க வேண்டும். இதனை வாசிப்பவர்கள் நல்ல காரியமாக மற்றையவர்களுக்கும் இது பற்றி தெரியப்படுத்துங்கள். இது பற்றி வாசிக்கச் சொல்லுங்கள். விபரீதம் ஒன்று நடைபெற்றால் பாதிக்கப்படுபவர்கள் நாம் மட்டும் அல்ல மாறாக அனைத்து மக்களும் என்பதனை உணரச்சொல்லுங்கள். வருமுன் காத்தல் என்பது இங்கே மிக அவசியமானதாகும். நாம் தேடுகின்ற சொத்து மற்றும் விட்டுச்செல்லப் போகின்ற நல்ல சுற்றுச்சூழல் என்பது எமது வருங்கால சந்ததிக்கு அவர்கள் வளமாக வாழ என்பதனை புரிந்தும் புரியாதது போல இருக்கின்றோமே என அங்கலாய்த்தால் எங்களூர் பெரியண்ணை.

தண்ணீர்த் தேவையை நாம் வினைத்திறனாக பயன்படுத்தினாலன்றி இனி வருங்காலங்களில் பிரச்சினையாகவே காண இடமுண்டு. மழை பெய்து மழை நீர் முறையாக தேக்கி வைக்கப்படாமல் விரயமாக கடலுக்குள் இன்னமும் செல்வதை நாம் தடுக்க முடியவில்லை.

இருக்கின்ற குளங்களை தூர் வாரி அதிகளவிலான நீரை தேக்கி வைக்கின்ற தேவை அதிகளவில் உணரப்பட்ட போதிலும் அவ்வாறான குளங்களின் கனவளவு அதிகரித்தாலும் எமக்குத் தேவையான நீர்த் தேவையை முழுவதுவமாகப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் இருக்காது என்பதனையும் எம் மக்களே கவனத்திலெடுங்கள்.

முன்னைய காலத்தில் இருந்த அரசர்கள் இருந்த தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி பாரிய குளங்களையும் வாய்க்கால்களையும் இன்னும் அணைகளையும் கட்டியெழுப்பியதால் இன்று நாம் அவற்றை பயன்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நீரின் தேவையை முன்கூட்டியே தீர்க்க தரிசனமாக உணர்ந்த நம் முன்னோர்கள் அதனை பலமானதாக நீண்டகாலம் பயன்பாட்டில் இருக்கத்தக்கதாக கட்டியிருந்தார்கள். அதற்குள்ளாக இருந்த கட்டடக்கலை அனைவரையும் பிரமிக்க வைக்கின்றது. ஆனால் தற்போது நாம் இருக்கின்ற குளங்களையும் பொன்கொழிக்கும் விளைநிலங்களையும் இருக்கின்ற குப்பைகள், கற்கள் கொண்டு நிரப்பி கட்டடங்களாக மாற்றி விட்டு அதில் முன்பக்கம் கடையையும் கட்டிவர்த்தகம் செய்ய முனைந்திருக்கின்றோம்.

சுகசீவிகளாக வருங்கால சந்ததியை மாற்ற முனையும் ஒவ்வொரு குடும்பமும் அவர்களை சுகதேகிகளாக மாற்ற முனையவில்லையே என்னும் ஆதங்கமும் உள்ளார்ந்திருக்கின்றது. இயற்கைக்கெதிராக நாம் செய்யும் அனைத்து செயற்பாடுகளுக்கு என்றோ ஒருநாள் விளைவு விபரீதமாகும் போது பதில் கூறக் கடமைப்பட்டவர்கள் என்பதனை மறந்து விடாதீர்கள். ஒருவர் செய்த வினை மற்றையவர்களையும் சேர்த்து தாக்கும் என்தனை இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டாமா? குழாய்க்கிணறு தோண்ட முனைபவர்களுக்கு இந்த விடயங்களை தெரியப்படுத்துங்கள். நீங்களாவது எடுத்துச் சொல்லுங்கள். இது நாம் எம்மவர்களுக்காக செய்கின்ற கடமை என்பதனை புரிந்து கொள்ளுங்கள்.

# ரணில் பதவியிலிருக்கும் வரை ஐ.தே.கவை கவிழ்க்க முடியாது

## அமைச்சர் தலதா கூளுரை

(பலாங்கொட)

**மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும். இந்த மோசடிகள் தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்ற வண்ணமேயுள்ளன. பிரதமர் ரனில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தை எவராலும் கவிழ்க்க முடியாது என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள தெரிவித்தார்.**

பலாங்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் உரிய பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்காமையால் மக்களுக்குத் தெரியப்படுத்த அந்த திட்டங்களின் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் வரலாற்றில் எந்த அரசாங்கமும் தொகுதியொன்றுக்கு 770 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்திருக்க முடியாது. 20 வருடங்களில் செய்யாத வேலைத்திட்டங்களை குறுகிய மூன்றரை வருடங்களில் நாம் செய்து முடித்துள்ளோம்.

எங்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக எவரும் கவனம் கொள்ளவில்லை. ஆட்சியைப் பொறுப்பேற்றதில் இருந்து இயற்கை அனர்த்தம், அரசாங்கத்துக்கு எதிரான சூழ்ச்சிகள், குண்டுத்தாக்குதல் என அனைத்து சவால்களையும் எதிர்கொண்டோம்.

இவற்றை காரணம்காட்டி எங்களால் எதையும் செய்யாமல் இருந்திருக்க முடியும். ஆனால் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் ஒருபோதும் இடைநிறுத்தப் போவதில்லை.



மகிந்த ராஜபக்ஷ காலத்தில் தற்போதுள்ள எந்தச் சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கடந்த அரசாங்கத் தரப்பினர் அபிவிருத்தியின் பேரைக்கொண்டு மக்களின் பணத்தைச் சூறையாடினார்களோ என்று சந்தேகம் ஏற்படுகின்றது. ஆனால் நாங்கள் மக்களின் பணத்தைச் சூறையாடி பிரச்சினையை ஏற்படுத்தப் போவதில்லை.

1977 தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரையில் செய்த வேலைத்திட்டங்களே 2015 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இன்று அனைவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் குறைகூறுகின்றனர்.


ஆனால் பிரதமரின் அலோசனைகளின் காரணமாகவே இந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி முறையாகக் கிடைக்கப் பெறுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அதனை கடந்த வருடம் மூண்ட அரசியல் நெருக்கடியின் போது நிரூபித்துக்காட்டியிருந்தோம்.

சமுர்த்திக் கொடுப்பனவு ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. கடந்த அரசாங்கத்தால் ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடிகள் தொடர்பான விசாரணைகளும் தற்போது இடம் பெற்று வருகின்றன.

வெள்ளை வான் கடத்தல் கலாசாரத்தைக்கொண்ட ஆட்சியில் மகிந்தவின் சர்வாதிகார பிரிவினரின் செயற்பாடுகளின் காரணமாகவே சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனா அந்தக் கட்சியை விட்டு வெளியேறினார். ஆனால் நாம் மீண்டும் குடும்ப ஆட்சிக்கு இடமளிக்கப் போவதில்லை என அமைச்சர் தலதா மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள்





(கொழும்பு)

வேலையில்லா பட்டதாரிகளுக்கு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உடனடியாக நியமனங்களை வழங்குமாறு கோரி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இருபதாயிரம் பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக திட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கு அந்நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது. அந்த நியமனங்களைப் பெரும்பாலும் அரசாங்க கட்சி சார்ந்தவர்களுக்கே வழங்கவுள்ளமை தொடர்பில் சந்தேகம் எழுவதாகவும் தெரிவித்த ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தன்னே குணானந்த தேரர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்.

அபிவிருத்தி அதிகாரிகளுக்கான போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இந்தப் போட்டிப்பரீட்சைக்கு 57 ஆயிரம் வரையான வேலையில்லாப் பட்டதாரிகள் தோற்றியுள்ளதுடன், இவர்கள் இரண்டு நேர்முகத்தேர்வுகளுக்கும் சமுகமளித்திருந்தனர்.

அந்தத் தேர்வுகள் மாவட்ட செயலகத்தின் ஊடாகவும் பிரதேச செயலகம் ஊடாகவும் இடம் பெற்றுள்ளதுடன், அதற்காக பாரியளவு நிதியும் செலவிடப்பட்டது. அதற்காக நேரமும் செலவிடப்பட்டது. இந்தத் தேர்வுகளில் தோற்றிய 3500 பேருக்கு மாத்திரமே வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இந் நிலையில், ஏனைய வேலையில்லாப்பட்டதாரிகளுக்கும் வேலையைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் முறைகேடாக நடக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

வேலையில்லாப் பட்டதாரிகள் 20 ஆயிரம் பேருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் அளிப்பது தொடர்பில் அமைச்சரவையில தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசாங்கம் பாரபட்சமாக செயற்படுகின்றமை புலப்படுகின்றது.

அபிவிருத்தி அதிகாரிகளுக்கான நியமனம் தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானங்களை மேற்கொண்டு விட்டு அந்தப் பதவிகளுக்காக நியமனங்களை வழங்கும் போது திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே, இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உடனடியாக நியமனங்களை வழங்கக்கோரி பிரதமர் அலுவலகத்தில் கோரிக்கை உள்ளடங்கிய மகஜரொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார். (இ-7)


# ஹிஸ்புல்லாவின் குற்றங்களை மூடி மறைக்க எதிரணி முயற்சி


## ஐ.தே.க.எம்.பி.காவிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ள எதிரணியினர் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் குற்றங்களை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர் என ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன குற்றம்சாட்டினார்.

அத்துடன், ஹிஸ்புல்லா தொடர்பான அனைத்து விபரங்களும் எம்மிடம் உள்ளது. தேவையான சந்தர்ப்பத்தில் முழு விபரங்களையும் பகிரங்கப்படுத்துவோம். குற்றவாளிகள் எவரும் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.





அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொடகவெலயில் விபத்து 19 பேர் வைத்தியசாலையில்


கொடகவெல - கலஹிட்டிய பகுதியில், தனியார் பேருந்து ஒன்று, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனம் ஒன்றின் மீது மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணித்த, 19 பேர் காயமடைந்த நிலையில், கொடகவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, இரக்குவானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த, விபத்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம் பெற்றது. அவிசாவளை பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் பங்கேற்று விட்டு மாத்தறை நோக்கிப் பயணித்தவர்களே, இவ்வாறு விபத்தை எதிர்நோக்கினர். விபத்தில் காயமடைந்த ஐவர் மேலதிக சிகிச்சைக்காக, கலவான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




ஐவர் ஜென்னிங்ஸ்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இந்தியா இரத்தம் சிந்தி நீண்டகாலம் போராடியே தனது சுதந்திரத்தைப் பிரித்தானியாவிடமிருந்து பெற்றுக் கொண்டது. சுதந்திரப் போராட்டம் என்றால் என்னவென்றே தெரியாத இலங்கையருக்கு பிரித்தானியா டொமினியன் அந்தஸ்து வழங்கப்போகின்றது என்பது டி.எஸ். சேனநாயக்கவுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தமையை பிரித்தானிய ஆவணங்களினூடாக அறியமுடிகிறது.

இச்சந்தர்ப்பத்தில் விவேகமும் திறமையும் தூரநோக்கும் கொண்ட டி.எஸ்.சேனநாயக்க தமிழர் தலைவரான பொன்னம்பலத்துடன் நிச்சயம் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பார். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்காது என்ற நோக்கில் அரசியல் சீர்திருத்தங்களுக்காக இலங்கை அரசியல் தலைவர்கள் வாதாடிக் கொண்டிருந்த வேளை 1945 இல் முடிவுக்கு வந்த உலக மகாயுத்தத்தின் பின் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவுள்ளது என்ற செய்தி அவர்களுக்கு நிச்சயம் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கும்.

இச்சந்தர்ப்பத்தை டி.எஸ். சேனநாயக்கவோ, ஜி.ஜி. பொன்னம்பலமோ நழுவவிட்டிருக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. டி.எஸ். சேனநாயக்க இரகசிய வாக்குறுதிகளை பொன்னம்பலத்திற்கும் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கும் வழங்கி முதலில் சுதந்திரத்தைப் பெறுவோம்.

பின்னர் எமது உள்நாட்டுப் பிரச்சினையை நமக்குள் பேசித் தீர்த்துக் கொள்வோம் என்றும் அரசாங்க சபையில் தமிழ்த் தலைவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படுமென்றும் நிச்சயமாக வாக்குறுதி அளித்திருப்பார். ஜி.ஜி. பொன்னம்பலம் ஒரு குற்றவியல் நியாயவாதி என்பது இலங்கையில் அக்காலத்தில் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

மிகவும் சிக்கலான குற்றவியல் வழக்குகளை அவர் தனது வாதத்திறமையாலும் யாருமே எதிர்பாராத வகையில் வினாக்களை எழுப்பி எதிராளியைத் திணறடித்தும் மிகவும் வேறுபட்ட அணுகுமுறையைக் கைக்கொண்டு வெற்றியடைவது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அதேவிதமான தந்திரோபாயத்தைத்தான் அவர் 1946, 1947 ஆம் ஆண்டுகளில் தமிழரின் அரசியல் சம்பந்தமான விவகாரங்களிலும் பிரயோகித்திருக்கின்றார் என்று அறிய இடமுள்ளது. எனவே டி.எஸ். சேனநாயக்கவுக்கும் ஜி.ஜி. பொன்னம்பலத்திற்குமிடையே தனிப்பட்ட முறையில் நடைபெற்ற பரஸ்பர பேச்சுவார்த்தைகள், செய்யப்பட்ட உடன்படிக்கைகள், அளிக்கப்பட்ட வாக் குறுதிகள் ஆகியவையே தமிழ்த் தலைவர்களும் பொன்னம்பலமும் அன்றைய கால கட்டத்தில் அவ்வாறு நடந்து கொண்டமைக்குக் காரணமாக அமைந்திருக்கக் கூடுமா? என்பதனை எதிர்கால வரலாற்று ஆராய்ச்சி மாணவரே கண்டுபிடித்தல் வேண்டும்.

எது எப்படியிருந்த போதும் பிரித்தானியாவிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்று பல பட்டங்களையும் பெற்று மகாராணியின் நியாயவாதிகள் சபையில் அங்கம் வகிக்கின்ற உயர்நிலையை நியாயவாதத் துறையில் ஈட்டி தலைசிறந்த குற்றவியல் வழக்கறிஞராகப் பரிணமித்த ஜி.ஜி. பொன்னம்பலம் எட்டாம் வகுப்பு வரையுமே கல்வி கற்றிருந்த சாதாரண டி.எஸ். சேனநாயக்கவிடம் தமிழரின் அரசியலைப் பொறுத்தவரை முற்று முழுதாகத் தோற்றுப் போனார் என்றே கருத வேண்டியுள்ளது.

இதே காலப்பகுதியில் பர்மாவுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. பிரித்தானிய அரசின் இந்த நடவடிக்கைகள் இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்குவதற்கான முன்னறிவிப்பைக் கொடுத்ததைக் காட்டி நிற்கின்றன.

மேலும் இலங்கைக்கு முழுமையான பொறுப்புள்ள அரச அந்தஸ்து வழங்கப்படும் என வைற்ஹோல் டி.எஸ். சேனநாயக்கவுக்கு 18 ஜூலை 1947 இல் அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சேனநாயக்க ஓ.ஈ. குணதிலகவை பிரித்தானியாவுக்கு அனுப்பி வைற்ஹோலுடன் ஆலோசனை நடத்தினார். அதன் விளைவாக 1948 பெப்ரவரியில் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டு இலங்கை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் ஜி.ஜி. பொன்னம்பலமும் தமிழ்த் தலைவர்களும் ஐம்பதுக்கு ஐம்பது சமபிரதிநிதித்துவத்திற்கு வாதாடி அவர்களது கோரிக்கைகள் முற்றாக மறுக்கப்பட்டு தமிழரின் அரசியல் எதிர்காலம் மிகவும் ஆபத்துக்குள்ளாகிய வேளையில் அவர்களுடைய அரசியல் நடவடிக்கைகள் மிகவும் அதிர்ச்சி தருவதாகக் காணப்படுகின்றது.

காந்தியும் நேருவும் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் சுதந்திரத்திற்காகவும் போராடி சுதந்திரம் பெற முனைந்த வேளையில் ஜின்னா தனது திறமையாலும் அர்ப்பணிப்பாலும் உறுதியான கொள்கையாலும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்து தனிநாடாக முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார். இது இலங்கைத் தலைவர்கள் கண் முன்னால் நடந்த விடயமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் ஒரு தனிநாடாகப் பிரிந்து போவதற்கு அதற்கு இருந்த அந்தஸ்தையும் உரிமையையும் விட இலங்கையில் தமிழரின் வடக்கு- கிழக்குப் பாரம்பரியப் பிரதேசம் பூரண சுயாட்சி பெறுவதற்கும் சுதந்திரம் அடைவதற்கும் ஜனநாயக அடிப்படையிலான முழுமையான அந்தஸ்தையும் உரிமையையும் கொண்டிருந்தது.

அவ்வாறிருந்தும்கூட ஜி.ஜி. பொன்னம்பலமோ, தமிழ்ப் பிரதிநிதிகளோ அல்லது தமிழ் அரசியல் தலைவர்களோ தமிழரின் பாரம்பரிய ஆட்சிப் பிரதேசமாகிய வடக்குக் கிழக்கை இலங்கையிலிருந்து பிரித்து தமிழரின் ஆட்சியில் விடும்படி பிரித்தானிய அரசைக் கேட்கவேயில்லை.

மாறாக இளகுநிலை ஒத்துழைப்பு (Responsive Cooperation) என்ற சொல்லைப் பிரயோகித்து சிங்கள அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளையும் பெற்று ஒட்டுமொத்தமாகத் தமிழரின் அரசியல் சுதந்திரத்தை சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் பிரித்தானிய அரசிற்கும் தமிழ்த் தலைவர்கள் விலைபேசி விற்றுள்ளார்கள் என வரலாறு கூறிநிற்கின்றது. இது இவ்வாறிருக்க சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் சீர்திருத்தமும் அதன் அமுல்படுத்தலும் தமிழரின் அரசியல் சுதந்திரத்தை முழுமையாகச் சீர்குலைத்து விட்டிருந்தன.

(தொடரும்)

# அரபு மொழியில் பெயர்ப்பலகை இருந்தால் உடனே அகற்றுங்கள்

## அமைச்சர் வஜிர சுற்றுநிருபம்

(மாத்தளை)

**தனியார் அல்லது அரச நிறுவனங்களில் அரபு மொழியில் பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தால், அவற்றை உடனடியாக அகற்றிவிடுமாறு சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் ஆகியோருக்கு வெளியிடவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணாக ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளைத் தவிரவுள்ள எந்தவொரு மொழியிலும் அறிவித்தல் பலகைகள் அமைக்கப்படக் கூடாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.


மாத்தளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வர்த்தக நிலையத்திற்கு தீ வைப்பு

(கொச்சிக்கடை)

நீர்கொழும்பு - கொச்சிக்கடை பிரதேசத் தில் 5 மாடிகள் கொண்ட வர்த்தக நிலையம் ஒன்றிற்கு இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றதுடன், இதன் காரணமாக குறித்த கட்டடம் பாரியளவில் சேதமடைந்தது. (இ-7)



# பகலில் எதிர்ப்பு இரவில் ஆதரவு

## மகிந்த அணி மீது மன்னப்பெரும விசனம்



(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் பகலில் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருகின்றனர். இரவில் எதிர்க்கட்சித் தலைவர் அவருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து தனது பக்கம் வாறீர்களா? என்றும், வந்தால் உங்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்றேன் எனவும் கூறுவதாக இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவது உண்மையென்றால் ஏன் அதில் எதிர்க்கட்சித் தலைவர் கையொப்பமிடவில்லை. எதிர்க்கட்சியின் நடவடிக்கைகள் மக்களை ஏமாற்றும் வகையில் அமைந்துள்ளது. முஸ்லிம் மக்களை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் நாம் ஒருபோதும் குற்றவாளிகளுக்கு ஆதரவு வழங்க மாட்டோம். அதேபோல் நல்லவர்களைத் தண்டிக்க இடமளிக்கவும் மாட்டோம்.

இன்று ஏற்பட்டுள்ள பயங்கரவாத நகர்வுகளுக்கு அங்கீகாரம் கொடுத்தது முன்னைய ஆட்சியாளர்களே எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1729

Search for people, places and things

### அரவிந்த்

திட்டகமிசனுடைய வேலை என்ன?
திட்டுறது சேர்



### ரித்வி

கடவுள் நாம வாழ்க்கையில் முன்னேற எத்தனையோ வாய்ப்புக்களைத் தருவார்... அதிலொன்றுதான் ஸ்மார்ட் போன் உடைந்து போவது



### பிரத்யூஸ்

பேஸ்புக்ல என் போட்டோக்கு தண்டச்சோறுன்னு அப்பா கமெண்ட் செய்ததுகூட கஷ்டமாயில்லை... ஆனா அந்த கமெண்டுக்கு அம்மா லைக் பண்ணினதுதான் வலிக்குது




### விபூசன்

ஸ்கூல்லயோ கொலிஜிலையோ தனியா மாட்டினா கஷ்டமே... நண்பரோட ஒரு குருப்பா மாட்டினா அதுவே சந்தோசமா மாறிவிடும்



### பிருந்தபவன்




### ஷார்மி

மென்டல் மோட்...
ஒவ்வொரு நண்பர்கள் குழுவிலையும் இப்படி ஒன்று இருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் மக்களைத் தோற்கடிக்க ஒருபோதும் நினைக்கவில்லை

## அமைச்சர் நவீன் விளக்கம்



(கொழும்பு)

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க நினைத்தோமே தவிர தமிழ் மக்களைத் தோற்கடிக்க நாம் ஒருபோதும் நினைக்கவில்லை என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் இப்போது முஸ்லிம் சமூகத்தின் பெயரில் நடக்கும் பயங்கரவாதத்தை தோற்கடிக்க முயற்சிக்கின்றோம்.

அதுமட்டுமல்ல இப்போது அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான குற்றச்சாட்டில் உண்மை இருந்தால் அவருக்கு எதிராக முதலில்போர்க்கொடி தூக்கும் நபர் நானே எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதலை எண்ணி நான் ஒருபோதும் சிரிக்கவில்லை. நான் வேறு ஒரு காரணிக்காக சிரித்ததைத் தவறாக சித்திரிக்க ஊடகங்கள் முயற்சிக்கின்றன எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (இ-7)

# பாடசாலைக்கு அருகில் 13 கைக்குண்டுகள் மீட்பு

பதுரலிய பாடசாலைக் கட்டடமொன்றுக்கு அருகிலிருந்து 13 கைக்குண்டுகளை பதுரலிய பொலிஸார் மீட்டனர். பாடசாலைக் கட்டடமொன் றுக்கு அருகிலிருந்த சந்தேகத் திற்கிடமான பொதியொன்று குறித்து பாடசாலை காவலில் ஈடுபடும் சிற்றூழியர் சோதனை யிட்டபோதே இவை கண்டுபிடிக் கப்பட்டன.

சிற்றூழியர் நேற்று முன்தினம் உணவு எடுத்துக் கொண்டு வரும் போதே இந்தப் பொதியைக் கண்டுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலையில் இன்னும் இருவர் காவலில் ஈடுபட்டிருந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சிற்றூழியர் இது தொடர்பில் அதிபருக்கு அறிவித்தல் விடுத்த பின்னர், அதிபர் ஊடாக பதுரலிய பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, இராணுவத்தினருடன் வருகை தந்த பொலிஸார் அதனைப் பாதுகாப்பாக அகற்ற நடவடிக்கை எடுத்தனர். மேலதிக விசாரணை களை பதுரலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு பாரிய அழிவு ஏற்பட்டிருக்கும்! என்று கூறிய எம்.பி. விசாரணைக்கு

(கொழும்பு)

பௌத்த மக்களிடையே மாற்று மதத்தவர்கள் பற்றிய குரோதத்தை ஏற்படுத்தும் வகையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் வெளிப்படுத்திய கருத்துக் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஹேசான் விதானவுக்கு எதிராக விசாரணையொன்றை நடத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் பிரிவுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பௌத்த மதத்தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருந்தால், அப்பாவி முஸ்லிம் சமூகம் கொலை செய்யப்பட்டு, பாரிய அழிவொன்று ஏற்பட்டிருக்கும்என ஹேசான் விதான தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி இவ்வாறு உத்தரவு பிறப்பித்தார்.

இலங்கை குற்றவியல் சட்டத்தின் 290 (அ) சரத்தின்படியும் 2007 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான இணக்கப்பாட்டு சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் அடிப்படையிலும், குறித்த நபர் குற்றம் இழைத்துள்ளாரா என்பது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கவுள்ளதாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் பிரிவு நீதிமன்றத்துக்கு முன்வைத்த கருத்தை கருத்தில் கொண்டே நீதவான் இந்த உத்தரவை விடுத்தார். (இ-7)

# ஹற்றன்-கண்டி பேருந்துச் சேவை பகிஷ்கரிப்பு-பயணிகள் நிர்க்கதி



(நாவலப்பிட்டி)

ஹற்றன் தொடக்கம் கண்டி வரை பயணிக்கும் தனியார் துறை பேருந்து உரிமையாளர்கள் மற்றும் இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் நேற்று போக்குவரத்துப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

ஹற்றன் தொடக்கம் கண்டி வரை பயணிக்கும் இ.போ.த. மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்துகளை நாவலப்பிட்டி பொது பேருந்து தரிப்பு நிலையத்தில் நிறுத்த வேண்டாம் என வலியுறுத்தி கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்து ஹற்றன் தொடக்கம் நாவலப்பிட்டி பொது பேருந்து தரிப்பு நிலையத்தின் ஊடாக கண்டிக்கு பயணிக்கும் தனியார் துறை பேருந்து உரிமையாளர்கள் மற்றும் இ.போ.ச போக்குவரத்து பேருந்து ஊழியர்கள் ஹற்றன் மத்திய பேருந்து தரிப்பு நிலையத்தில் மையமாக வைத்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் ஹற்றன் தொடக்கம் கினிகத்தேனை, நாவலப்பிட்டி ஆகிய வழியாக கண்டிக்கு செல்லும் தனியார் போக்குவரத்து பேருந்துகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கான பேருந்துகள் சேவையிலிருந்து விலகியுள்ளன.

இந்நிலையில் நேற்றுக் காலை முதல் ஹற்றன் தொடக்கம் கண்டி வரை பயணிக்க திட்டமிட்டிருந்த அனைத்துப் பயணிகளும் பேருந்து சேவையி ன்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ள நிலையில், போக்குவரத்து அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட ஆராதனைகள்

(கொழும்பு)

ஏப்ரல் 21 இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் போது உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை விசேட ஆராதனைகள் இடம்பெறும்.

கொழும்பு மறைமாவட்ட சமூக தொடர்பாடல் மற்றும் கலாசார கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் எட்மண்ட் திலகரத்ன அடிகளார் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இந்த ஆராதனைகள் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இந்த ஆராதனைகள் ஆரம்பமாகும். (இ-7)

## பிரதேச சபை உறுப்பினரின் வீட்டின் மீது திடீர் தாக்குதல்

(கொழும்பு)

ஹோமாகம பிரதேச சபை உறுப்பினர் கமல் சந்தனவின், மீகொட பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது, நேற்று அதிகாலை, இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டதாக, மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில், பிரதேச சபை உறுப்பினரின் கார், மோட்டார் சைக்கிள் மற்றும் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் என்பனவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலரால், இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-7)

## வசீம் தாஜுடீன் வழக்கு அநுர சேனநாயக்கவை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு



(கொழும்பு)

வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.


வசீம் தாஜுடீன் படுகொலை தொடர்பான சாட்சியங்களை வேண்டுமென்றே மறைத்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அவரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 400 | 160 | 200 |
| தக்காளி | 60 | 60 | 240 | 35 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 60 | 110 | 60 |
| கோவா | 60 | 40 | 100 | 55 | 60 |
| கரட் | 80 | 80 | 160 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 35 | 40 |
| புடோல் | 60 | 60 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 160 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 | 60 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 250 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 140 | 200 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 180 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 180 | 40 | 80 |
| குடைமிளகாய் | 100 | 80 | 260 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 550 | 600 | – | 350 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 140 | 70 | 120 |
| கத்தரிப்புள்ளா | 60 | 60 | – | 50 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 200 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 160 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 400 | 90 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 100 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | – | – | 60 | 100 | 80 |

# சிறுவர் அரங்கம்

# சிங்கம் - அசிங்கம்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதனுடைய மனைவி நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டது. அதனால் அது மிகவும் கவலையுடன் காணப்பட்டது. சிங்கத்திடம் நரி, புலி, கரடி, சிறுத்தை போன்ற மிருகங்கள் வந்து துக்கம் விசாரித்துச் சென்றன. சிங்கம் முன்போல் காட்டில் அதிகமாக நடமாடாமல் தன்னுடைய உணவிற்காக மட்டும் வெளியே செல்லும். மற்றப்படி தன்னுடைய குகையிலேயே இருக்கும். எப்பொழுதும் அது தன்னுடைய மனைவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

இப்படியே நாட்கள் பல ஆகிவிட்டன.

சிங்கத்தின் நடமாட்டம் அதிகமாக இல்லாததால் ஒருநாள் புலியும், நரியும் சிங்கத்தை காணச் சென்றன. சிங்கம் மிகவும் சோர்ந்து போய் வேட்டைக்கு கூடச் செல்லாமல் கண்ணீருடன் காணப்பட்டது.

புலியும் நரியும் சிங்கத்திடம், "இன்னும் அழுது கொண்டிருந்தால் என்ன பயன். அதனால் மனதை திடப்படுத்திக் கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்" என்றன.

அதற்கு சிங்கம் என்னுடைய மனைவி இல்லாமல் என்னுடைய பலம் அனைத்தையும் நான் இழந்து விட்டேன். என்னுடைய மனைவி தான் நான் வேட்டைக்குச் செல்லும் போது உற்சாகமும் ஊக்கமும் கொடுத்து வழியனுப்புவாள். அதனால் அவள் இல்லாமல் என்னால் வேட்டைக்குச் செல்ல மனமே இல்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை என்றது. புலியும் நரியும் சிங்கத்திடம் சிறிது நேரம் பேசி விட்டு குகையை விட்டு வெளியே வந்து தங்களுடைய இருப்பிடம் நோக்கிச் சென்றன.

நரி தன்னுடைய இருப்பிடத்திற்கு செல்லும் வழியில் கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்களைச் சந்தித்தது. நரி அந்த மிருகங்களிடம் சிங்கம் தன்னுடைய முழுப் பலத்தையும் இழந்து விட்டது என்று அதன் வாயாலேயே சொன்னது என்றும் வேண்டுமானால் புலியிடம் கேட்டுப் பாருங்கள் என்றது.

புலியும் தற்செயலாக அவ்வழியே வந்தது. கரடி, சிறுத்தை, ஓநாய் ஆகியன புலியிடம் நரி சொல்வது உண்மையா? என்று கேட்டன. புலியும் அதற்கு ஆமாம் தானும் நரியும் சிங்கத்தை சந்திப்பதற்காக சென்ற போது சிங்கம் அதன் வாயாலேயே தன்னுடைய மனைவி இறந்த பின் தன்னுடைய பலம் அனைத்தையும் இழந்து விட்டதாக சொன்னது என்று புலி மற்ற மிருகங்களிடம் கூறியது.

இதைக் கேட்டவுடன் மற்ற மிருகங்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஏனென்றால் சிங்கத்தின் பலத்தை வைத்துத் தான் காட்டிலுள்ள மற்ற மிருகங்கள் அதற்குப் பயந்து மரியாதை கொடுத்தன. ஆனால் சிங்கமே தன்னுடைய பலம் அனைத்தையும் தான் இழந்து விட்டதாக ஒப்புக் கொண்டதால் தாங்கள் இனி சிங்கத்திற்கு பயப்பட வேண்டாம் என்று புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலான மிருகங்கள் தாங்களுக்குள் பேசி முடிவெடுத்தன.

நான்கு நாட்கள் கழித்து புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் சிங்கம் அதன் குகைக்கு செல்லும் வழியில் உள்ள ஒரு மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தன. அப்பொழுது அவ்வழியே சிங்கம் வந்தது. சிங்கம் அமைதியாக அவ் வழியே அவர்களை கடந்து செல்கையில் புலியும் நரியும் தாங்கள் இனி யாரும் சிங்கத்திற்கு பயப்படமாட்டோம் என்று அதன் காதில் விழுமாறு சற்றுச் சத்தமாகவே சொன்னார்கள்.

சிங்கம் அதைக் கேட்டு ஒன்றும் சொல்லாமல் அமைதியாகச் சென்று விட்டது.

புலியும் நரியும் இப்படி சொல்லியும் சிங்கம் அமைதியாக சென்றதால் சிங்கம் உண்மையிலேயே தன்னுடைய பலத்தை இழந்து விட்டது என்றும் அது பயந்து தான் அமைதியாகச் செல்கிறது என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டன.

சிங்கத்தை அடிக்கடி புலி, நரி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் கேலி செய்து வந்தன. சிங்கமும் அமைதியாக அவர்களின் பேச்சை காதில் வாங்காமல் சென்று விடும்.

ஒருநாள் சிங்கம் வேட்டைக்குச் சென்று ஒரு மானைக் கொன்று அதைத் தன்னுடைய வாயில் கவ்விக் கொண்டு குகையை நோக்கி வந்து கொண்டிருந்தது. சிங்கம் வழக்கம் போல் குகைக்கு செல்லும் வழியில் நரி, புலி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் நின்று கொண்டிருந்தன.

சிங்கம் தூரத்தில் இருந்தே அவர்களைப் பார்த்து விட்டபடியால் அமைதியாக நடந்து வந்தது. நரி மற்ற மிருகங்களிடம் தான் சிங்கத்தின் வாயில் கவ்விக் கொண்டிருக்கும் மானை பறித்து வருவதாக கூறி சிங்கம் வரும் வழியில் குறுக்கே சென்று நின்றது.

சிங்கமும் நரியின் அருகே வந்து விட்டது.

நரி சிங்கத்திடம் சிங்கத்தின் வாயில் உள்ள மானை தன்னிடம் கொடுத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுமாறு கூறியது. இல்லாவிட்டால் தான் சிங்கத்தை அடித்தே கொன்று விடுவதாக மிரட்டியது. சிங்கத்தின் வாயில் கவ்விக் கொண்டிருக்கும் மானை பிடித்து இழுத்தது. சிங்கம் ஏற்கனவே பசியில் வேறு இருந்தது. தான் கஷ்டப்பட்டு வேட்டையாடி விட்டு தனக்காக கொண்டுவரும் இரையை மற்றொருவர் அபகரிக்க நினைப்பதால் அது இவ்வளவு நாட்கள் காத்த தன்னுடைய பொறுமையை இழந்து விட்டது. கவ்வியிருந்த மானை கீழே வைத்து விட்டு மிகக் கடுமையான கோபத்துடன் நரியைப் பிடித்து இழுத்து அதை இரண்டே அடியில் அதனுடைய உடலை இரண்டாக கிழித்து எறிந்து விட்டது.

இவற்றை எல்லாம் மரத்தடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த புலி, ஓநாய், கரடி, சிறுத்தை ஆகியன அங்கிருந்து நாங்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்து விட்டன.

சிங்கம் மானை தன்னுடைய வாயில் கவ்வி தன்னுடைய குகையை நோக்கி கம்பீரமாக நடந்து சென்றது. சிங்கம் சொன்னதை தவறாக எடுத்துக் கொண்ட நரி சிங்கத்திடம் வாலாட்டி தன்னுடைய முடிவை தானே தேடிக் கொண்டது. நரிக்கும் மற்ற மிருகங்களுக்கும் தெரியாமல் போய் விட்டது, சிங்கத்தின் வீரமும் பலமும் எப்பொழுதும் அதை விட்டுப் போகாதென்று.

## மகாராஜாவும் மக்களும்



குன்னத்தூரான்கள் சிலர் திருவிதாங்கூர் அரண்மனைக்கு மகாராஜாவைப் பார்க்க வந்தனர். மகாராஜா அவர்களை இரண்டு நாள் தங்க வைத்தார். அவர்கள் சமைத்து உண்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களையும் எரியும் விளக்கு ஒன்றையும் கொடுத்தார். ஆனால் குன்னத்தூரார்கள் சமைக்கவில்லை.

பின்னர் மகாராஜா அவர்களிடம் 'ஏன் சமைக்கவில்லை' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'சமைப்பதற்கு எல்லாம் தந்தீர்கள், தீப்பெட்டி தரவில்லையே' என்றனர். அதற்காகத்தான் எரியும் விளக்குத் தந்துள்ளேன் என்றார் மகாராஜா. அப்போது குன்னத்தூரார்கள் 'எரியும் விளக்கு வெளிச்சத்திற்குத் தானே ஆச்சி' என்று பதிலளித்தனர்.

## சிந்தனைத்துளிகள்

- இரண்டு முயல்களை விரட்டினால் ஒரு முயலைக்கூட பிடிக்க முடியாது.
- சீரிய எண்ணங்களை செயற்படுத்தும் போது அவை சிறந்த செயலாகின்றன.
- நாம் முன்னேற நட்பு ஒரு வாயிற்படி.
- ஒரு பெண் இரகசியமாக பாதுகாப்பது அவள் வயது ஒன்றைத் தான்.

## பொது அறிவுத்துணுக்குகள்

- வீட்டிற்கு ஒரு பியானோ உள்ள நாடு, இங்கிலாந்து.
- பழங்களின் அரசன் எனப்படுவது, மாம்பழம்.
- எலும்புக்கூடு இல்லாத உயிரினம், ஜெல்லி மீன்.
- 'ஓகஸ்ட் புரட்சி' என அழைக்கப்படுவது, வெள்ளையனே வெளியேறு இயக்கம்.
- வாகனங்களில் இருந்து வெளியாகும் மாசு, கார்பன் மோனாக்சைடு.
- 'கூத்தராற்றுப்படை' என்று குறிப்பிடப்படும் சங்க இலக்கியம், மலைபடுகடாம்.
- முன்னங்கால்களில் காதுகளைக் கொண்ட உயிரினம், வெட்டுக்கிளி.

சிறந்த குதிரையானாலும் சாட்டையடியிலிருந்து தப்ப முடியாது. அதேபோல், இந்த உலகத்தில் என்ன தான் சிறந்த மனிதனாலும் குற்றச்சாட்டிலிருந்து தப்ப முடியாது...! ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி சனாதன தர்மத்தின் வெற்றியாகட்டும்

இந்திய தேசத்தின் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பாரதிய ஜனதா கட்சி பெரு வெற்றி பெற்றுள்ளது.

பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றதன் அடிப்படையில், நரேந்திர மோடி அவர்கள் மீண்டும் பிரதமராகிறார்.

அவரின் ஆட்சிக்காலம் அடுத்த ஐந்து வருடங்களுக்கு நீண்டு செல்லும்.

இந்திய தேசத்தின் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பான கருத்துக் கணிப்புகள் பலவாறாக இருந்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்ராலின்; தேர்தல் பிரசாரமொன்றில் உரையாற்றும்போது, ராகுல் காந்தி பிரதமராக வருவது உறுதி என்று அறுதிபடக் கூறியிருந்தார்.

இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியே பிரதமராக வருவார் என சில கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்தன

எனினும் கடந்த பொதுத் தேர்தலினின்றும் ராகுல் காந்தியின் இந்திய காங்கிரஸ் தோல்வி கண்டுள்ளது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இவ்வாறானதொரு நிலைமைக்கான காரணம் என்ன என்ற ஆய்வுகள் இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இதில், ராகுல் காந்தி சோனியா காந்தியின் மகன் என்பதும் சோனியா காந்தி இத்தாலியப் பெண் என்பதும் காரணமாக இந்திய தேசத்தை ஆள்வதற்கான நூறுவீதத் தகைமையை ராகுல் காந்தி கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே ராகுல் காந்திக்கான சந்தர்ப்பம் இல்லாமல் போனது என்ற முடிவுக்கு வர முடியும்.

நூறு கோடி மக்கள் தொகையைக் கடந்து நிற்கும் பாரத தேசத்தை ஆள்வதற்கு ஓர் இந்தியன் இல்லையா? என்ற கேள்விகள் ஒவ்வொரு இந்தியர்களிடமும் எழுந்தபோது அதன் வெற்றி நரேந்திர மோடிக்காயிற்று.

தவிர, இன்றைய உலகம் முழுவதும் தாம் தாம் சார்ந்த சமயத்தை முன்னிலைப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கு மேலாக சர்வதேசம் சார்ந்த மதத் தலைமைகள் தத்தம் சமய விஸ்தரிப்புக்காகக் கடுமையாகப் பாடுபடுவதுடன் இதற்காக அரசியலிலும் ஈடுபடத் தலைப்பட்டுள்ளன.

இந்நிலையில் உலகில் இந்து சமயம் மட்டுமே தன் சமயத்தின் எதிர்காலம் என்பது பற்றிச் சிந்திக்காமல் இருந்தது.

உலகம் முழுவதும் தத்தம் சமயப் பரப்புகையில் ஈடுபட, இந்து சமயத்தவர் மட்டும் தம் சமயத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவில்லை என்ற உண்மை உணரப்பட்டது.

இதன் அடிப்படையில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெறுவதும் நரேந்திர மோடி பிரதமராக வருவதும் தவிர்க்க முடியாதது என பாரத பூமியில் பெரும்பான்மையாக இருக்கின்ற இந்துக்கள் முடிவு செய்தனர்.

இந்த அடிப்படையில் நரேந்திர மோடி அவர்கள் மீண்டும் பிரதமராகியுள்ளார். பிரதமர் மோடியின் வெற்றி சனாதன தர்மத்தின் வெற்றியாகட்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்கு பிரதமர் மோடி உதவி செய்யட்டும். இந்தியாவை நம்புங்கள் என்று பிரதமர் மோடி கூறிய வார்த்தை மீதான நம்பிக்கை இன்னமும் ஈழத்தமிழ் மக்களிடம் பழுதுபடாமல் இருக்கிறது என்பதை மட்டும் பிரதமர் மோடிக்கான வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிக்கு இடமில்லை

## சபாநாயகருக்கு அமரவீர கடிதம்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் அதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, பொது எதிரணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளாமை குறித்து எதர்க்கட்சியின் பிரதம கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த அமரவீர சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில்,

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவுக்கும், அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றமற்றவர் எனக் காண்பிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்பதோடு, அதற்கிணங்கவே அவர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதே நாட்டின் பெரும்பான்மை மக்களினதும், சுதந்திரக் கூட்டமைப்பினதும் நிலைப்பாடாகும்.

அமைச்சர் றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 60 பேரை விட அதிகமானவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ள உறுப்பினர்களும், அதற்கு ஆதரவு வழங்கியவர்களும் தெரிவுக் குழுவில் பங்கேற்றிருந்தால் பிரேரணை மீதான விவாதத்தின்போது அவர்கள் முன்வைக்க எதிர்பார்த்துள்ள காரணங்களை குறிப்பிடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாரவூர்தியில் சிக்குண்டு வயோதிபப் பெண் பலி!

(ஹற்றன்)

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் ஹற்றன் நகரில் பாரவூர்தி ஒன்றில் சிக்குண்டு வயோதிபப் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12.15 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிலையில் பாரவூர்தியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வீதியைக் கடக்க முயற்சித்த குறித்த வயோதிபப் பெண், பொகவந்தலாவ பகுதியிலிருந்து ஹற்றன், குடாகம பகுதிக்குச் சென்ற பாரவூர்தியிலே சிக்குண்டதில் உயிரிழந்தார். (இ-7)

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டில் மருதனார்மடம் வாசிக்கு 20 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையால் நடத்தப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் மருதனார்மடத்தைச் சேர்ந்த நபருக்கு 20 இலட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

மருதனார்மடம் சந்தைப் பகுதி முகவர் ஊடாகப் பெற்றுககொண்ட பற்றுச்சீட்டிற்கே இவ் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. (5)

# மாணவர்களை போதைக்கு அடிமையாக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

## பொலிஸாருடன் இணைந்து விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்வோரை அடையாளம் கண்டு கைது செய்வதற்காக பொலிஸாருடன் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக பாடசாலையை பாதுகாக்கும் குழுக்களின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக போதைப் பொருள் ஒழிப்பு ஜனாதிபதி பணியகத்தின் பணிப்பாளர் டொக்டர் சம்மந்த குமார கித்தலவ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்,

"பாடசாலை மாணவர்களை போதைப் பொருளுக்கு அடிமையாக்கும் முயற்சிகளை சிலர் செய்வார்கள். இளம் வயதிற்கு உட்பட்டவர்கள் விசேடமாக 6ஆம், 7ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் இதில் கூடுதலாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. குறிப்பாக இந்த வகுப்புக்களில் உள்ள மாணவர்கள் அனைவரும் இதில் ஈடுபடுவார்கள் என்று கூற முடியாது.

இவர்களை இதில் உள்வாங்குவதற்கு சிலர் முயற்சிப்பார்கள். இவ்வாறான மாணவர்களையே இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர் கூடுதலாக கவனம் செலுத்தி வருகின்றனர். இவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வதற்கு பொலிஸார் மூலோபாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பாடசாலை பாதுகாப்பு குழுவை இணைத்து கொண்டு இது தொடர்பான தகவல்களை பெற்றுவருகின்றனர். அனைத்து பாடசாலைக்கும் அருகில் செயற்படும் இவ்வாறான குழுக்களை கைது செய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது" என்று குறிப்பிட்டார். (ம-3)

# அவசரகால சட்டத்தை தொடர்ந்து நீடிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமாகும் செயல்

## பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவிப்பு

இஸ்லாம் அடிப்படைவாதத்தை கட்டுப்படுத்த அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்திக் கொண்டு மாணவர்களை அடக்க நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன் அவசரகால சட்டம் அமுலில் இருந்தும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத தாக்குதலை கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாமல் போயுள்ளது என மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையை கட்டுப்படுத்துவதற்காக அவசரகால சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. தொடர்ந்தும் அதனை நீடிப்பதன் அவசியம் இருப்பதால் அதற்கு ஆதரவளிக்கின்றோம். ஆனால் அவசரகால சட்டத்தை தொடர்ந்து கொண்டு செல்வது ஜனநாயகத்துக்கு விரோதமாகும். அது மக்களை கட்டுப்படுத்துவதாக அமையும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பலன் கருதாமலும், சுயநலம் சிறிதும் இல்லாமலும் கடவுளிடம் பக்தி செலுத்துவதே சிறந்தது.
- நீங்கள் எதை நம்புகிறீர்களோ, அதுவாகவே மாறி விடுவீர்கள்.
- வலிமையே வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய உண்மை இது தான்.
- தீமையிலிருந்தும் மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினையைப் பெறுகிறான்.
- சில நேரத்தில் இன்பத்தை விட, துன்பமே நமக்கு சிறந்த ஆசிரியராக விளங்குகிறது.

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத் தொடர் இறுதியில் ரி.சி.சி. எதிர் கே.சி.சி.சி அணிகள்





கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கே.சி.சி.சி. அணியை எதிர்த்து ரி.சி.சி. அணி மோதவுள்ளது. இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் ரி.சி.சி. அணி முதல் சுற்றில் சிறிகாமாட்சி அணியை 3 இலக்குகளாலும் 2 ஆவது சுற்றில் டிறைற்றேன் அணியை 20 ஓட்டங்களாலும் கால் இறுதியில் ஜொலிஸ்ரார் அணியை 7 இலக்குகளாலும் மேற்பிரிவு இறுதிப் போட்டியில் கே.சி.சி.சி. அணியுடன் ஒரு இலக்கில் தோல்வியையும் அரை இறுதியில் பற்றீசியன்ஸ் அணியை 8 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

கே.சி.சி.சி. அணி 2 ஆவது சுற்றில் நியூஸ்ரார் அணியை 7 இலக்குகளாலும் கால் இறுதியில் அரியாலை சென்றல் அணியை 9 இலக்குகளாலும் மேற்பிரிவு இறுதிப் போட்டியில் ரி.சி.சி. அணியை ஒரு இலக்கினாலும் அரை இறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை 8 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# உலகக் கோப்பையில் மிரட்ட காத்திருக்கும் சுழல் மன்னர்கள்!



உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் பந்துவீச்சில் மிரட்ட காத்திருக்கும் சுழற்பந்து வீச்சாளர்கள் குறித்து பார்ப்போம்.

இங்கிலாந்தில் வரும் 30ஆம் திகதி உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ளது. அங்கு தற்போது வெப்பமான காலநிலை நிலவுவதால், ஆடுகளங்கள் உலர்ந்திருக்கும்.

எனவே சுழற்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் அதிகளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த உலகக்கோப்பையில் விளையாட உள்ள சுழற்பந்து வீச்சாளர்கள் குறித்து பார்ப்போம்.

**இம்ரான் தாஹிர்**
**(தென்னாபிரிக்கா)**

40 வயதான இம்ரான் தாஹிருக்கு இது கடைசி உலகக்கோப்பை தொடர். சிறப்பான சுழற்பந்து வீச்சாளரான இவர், சரியான நேரத்தில் விக்கெட்டை வீழ்த்தி திருப்புமுனையை ஏற்படுத்தக் கூடியவர். சமீபத்தில் நடந்த ஐ.பி.எல்.தொடரில் 26 விக்கெட்டுகள் வீழ்த்திய தாஹிர், 98 ஒருநாள் போட்டிகளில் 162 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 7/45 ஆகும்.

**ரஷித் கான்**
**(ஆப்கானிஸ்தான்)**

ஆப்கானிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான இளம் சுழற்பந்துவீச்சாளர் ரஷித் கான். கடந்த இரு ஆண்டுகளாக சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார். சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தக் கூடிய ரஷித், சமீபத்தில் நடந்த ஐ.பி.எல். தொடரில் 17 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

இதுவரை 59 போட்டிகளில் விளையாடியுள்ள ரஷித் கான் 125 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 7/18 ஆகும்.

**குல்தீப் யாதவ்**
**(இந்தியா)**

இந்திய கிரிக்கெட் அணியின் துருப்பு சீட்டாக குல்தீப் யாதவ் விளங்கி வருகிறார். கடந்த ஆண்டு நடந்த இங்கிலாந்துக்கு எதிரான தொடரில், 3 போட்டிகளில் 9 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். ஆனால், சமீபத்தில் நடந்த ஐ.பி.எல்.தொடரில் இவரது ஆட்டம் சிறப்பாக இல்லை.

எனினும், சர்வதேச கிரிக்கெட் மாறுபட்டது என்பதால் இவரது தாக்கம் இந்த உலகக்கோப்பை தொடரில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 43 போட்டிகளில் 86 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ள இவரது சிறந்த பந்துவீச்சு 6/25 ஆகும்.

**ஷகிப் அல் ஹசன்**
**(வங்கதேசம்)**

ஷகிப் அல் ஹசன் வங்கதேச அணியின் முக்கியமான வீரர். ஓல்-ரவுண்டர் வீரரான இவர், எதிரணியின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்துவதில் வல்லவர். அனைத்து வகை கிரிக்கெட்டிலும் சிறப்பாக விளையாடி வரும் ஷகிப், இந்த உலகக்கோப்பை தொடரில் தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 193 போட்டிகளில் 249 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 5/47 ஆகும்.

**அடில் ரஷித்**
**(இங்கிலாந்து)**

31 வயதாகும் அடில் ரஷித், இங்கிலாந்து அணியின் பிரதான சுழற்பந்து வீச்சாளராக விளங்குகிறார். இறுதிகட்ட ஓவர்களில் விக்கெட்டுகளை வீழ்த்தி எதிரணிக்கு நெருக்கடி கொடுப்பதில் இவர் வல்லவர்.

இதுவரை 82 போட்டிகளில் 132 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கும் அடில் ரஷித்தின் சிறந்த பந்துவீச்சு 5/27 ஆகும்.

**ஆடம் ஸம்பா**
**(அவுஸ்திரேலியா)**

அவுஸ்திரேலிய அணியில் கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பான சுழற்பந்து வீச்சாளராக வலம் வருபவர் ஆடம் ஸம்பா. இவரது பலமே துல்லியமாக பந்துவீசுவது தான். தனது கூக்ளி பந்துவீச்சால் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்துபவர் ஸம்பா. இதுவரை 44 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 60 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 4/43 ஆகும்.

**ஷதப் கான்**
**(பாகிஸ்தான்)**

இளம் பந்துவீச்சாளரான ஷதப் கான், பாகிஸ்தான் அணியின் பிரதான சுழற்பந்து வீச்சாளராக தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் ட்ராபியை வென்ற பாகிஸ்தான் அணியில் இவர் இடம்பிடித்திருந்தார்.

இதுவரை 34 போட்டிகளில் 47 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 4/28 ஆகும். (க)

# யாழ். பிரதேச இளைஞர் சம்மேளன இறுதிநாள் விளையாட்டு நிகழ்வுகள்




யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் விளையாட்டு நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் கடந்த 21 ஆம் திகதி பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் இறுதி உதைபந்தாட்ட நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்கள் மற்றும் கேடயங்கள் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் கலந்து கொண்ட முதல்வர் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கு வெற்றிக் கேடயங்களை வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், மாணவர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். (க)

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளதாக வடமாகாண உடற் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் இ. ராஜசீலன் அறிவித்துள்ளார்.

இதில் முதலாம் கட்ட போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து 7ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் ஆண்கள், பெண்களிற்கான கூடைப்பந்து போட்டிகள் ஆண்களுக்கான சதுரங்கப் போட்டிகளும், 3,4 ஆம் திகதிகளில் ஆண்கள், பெண் களுக்கான எறிபந்தாட்ட போட்டிகள், கரம் போட்டிகளும் 5 ,6 ஆம் திகதிகளில் ஆண்கள்,பெண் களிற்கான ரெனிஸ் போட்டிகள், பளுதூக்கல் , கடற்கரைப்பந்து போட்டிகளும் 7,8,9ஆம் திகதிகளில் ஆண்கள் , பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகளும் நடைபெறவுள்ளது. (க-60)

## அனைத்து தலை...

அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தை தொடர்ந்து ஒருமாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர், பயங்கரவாத தாக்குதலை அடுத்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும், ஆனால் இவர்கள் ஆதாரங்கள் இன்றி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள்.

தாக்குதலுடன் தொடர்புபட்டவர் தொடர்பில் ஆதாரம் இருந்தால் பொலிஸ் விசேட பிரிவினர் மற்றும் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இதனை செய்யாமல் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு குறித்த தாக்குதல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு எதிர்தரப்பினர் எந்தவொரு ஆதரவையும் வழங்கவில்லை.

இவர்கள் அனைவரும் தேர்தலை இலக்குவைத்து தற்போது காய் நகர்த்தி வருகின்றனர். குறிப்பாக முஸ்லிம் மக்கள் மற்றும் கத்தோலிக்கர்களை இலக்கு வைத்து பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே எதிர்கட்சியினருக்கு கூறிக்கொவது என்னவென்றால், அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒருபுறம் தள்ளிவிட்டு சர்வதேச பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்ட அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். (ம-3)

## அரசு நடவடிக்கை...

அத்துடன் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்திருக்கும் வீதி மூடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத தாக்குதலினால் நாட்டு மக்களினதும் வியாபார சமூகத்தினதும் பொருளாதாரத்துக்கு மேற்கொள்ளப்பட்ட பாதிப்பில் இருந்து மீளும்வரை விசேட சலுகை பொருளாதார முகாமைத்துவ பொதியொன்றை உடனடியாக செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தேசிய கொள்கை, பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரான பிரதமர் உட்பட அரசாங்கம் இதுதொடர்பாக எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் சபைக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

எனவே அரசாங்கம் எதிர்க்கட்சிக்கு குற்றம் சுமத்திக்கொண்டிருக்காமல் விழுந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்ய தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்திருக்கும் வீதி மூடப்பட்டிருப்பதாக பொய் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் எந்த உண்மையும் இல்லை. நான் இருக்கும் வீதியிலே அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் சிலரின் வீடுகளும் இருக்கின்றன எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

## கொழும்பிலிருந்...

பங்களை அகற்றி, அந்தப் பகுதிகள் வர்த்தக நடவடிக்கைக்கு வழங்கப்படவுள்ளது.

50 ஆயிரம் குடும்பங்கள் வாழும் 400 ஏக்கர் காணியில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மாளிகாவத்தை ரயில் நிலையத்திற்கு சொந்தமான காணி, கெத்தராம அப்பிள் தோட்டம், ப்ளூமென்டல் பிரதேசத்தின் ஏரி, இரத்மலானை நீர்ப்பாசன காணி ஆகிய இடங்களில் வாழும் குடும்பங்கள் பிறிதொரு இடத்திற்கு மாற்றப்படவுள்ளனர்.

இவ்வாறு அகற்றப்படும் குடும்பங்களுக்காக 17ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு குடும்பத்திற்கு 30 லட்சம் ரூபாய் பெறுமதியான வீடு ஒன்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆசிய வங்கியினால் உட்கட்டமைப்பு வசதிக்காக வழங்கப்படும் கடன் திட்டத்தின் கீழ் இதற்காக நிதி வழங்கப்படவுள்ளது.

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் அமைச்சரவையில் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பயண தடைக்கா...

கவும் ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து இதன்போது வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டதாக பிரதமரின் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இயல்பு வாழ்க்கை தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் இதன் போது உறுதியளித்துள்ளார்.

இதனால், இலங்கைக்கு செல்ல வேண்டாம் என விதிக்கப்பட்டுள்ள பயண தடை உத்தரவை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர், ராஜதந்திரிகளிடம் கோரிக்கை விடுத்ததாகவும் பிரதமரின் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## ஐ.எஸ் அமைப்பு...

பெரியமுல்லையில் அமைந்துள்ள பெரிய பள்ளிவாசலின் முன்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக நேற்று ஜும்மா தொழுகையின் பின்னர் நீர்கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் ஜும்மா மஸ்தித் வீதி வழியாக நீர்கொழும்பு - சிலாபம் பிரதான வீதியில் அமைந்துள்ள யூஸுபியா பள்ளிவாசல் வரை பேரணியாக வந்து, பிரதான வீதியோரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராகவும், தேசிய தவ்ஹீத் ஜமாத் இயக்கத்தினால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு எதிராகவும், குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மரணித்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் எதிர்ப்புக் கோசங்களையும் எழுப்பினர். (ம-3)

# வடக்கு வீதியில் அதிக கெடுபிடி அங்கலாய்க்கின்றனர் மக்கள்!

## மன்றில் டக்ளஸ் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சோதனைகள் என்ற பெயரில் நாட்டில் அனர்த்தங்கள் இடம்பெற்ற ஏனைய பகுதிகளைவிட வடக்கு நோக்கியதான பகுதிகளிலேயே ஏற்பாடுகள் அதிகமாகி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சோதனை நடவடிக்கைகள் நாட்டின் தற்போதைய நிலையில் தேவை என்கின்ற போதிலும், அது அளவுக்கு அதிகமாகி, மக்களுக்கு பெரும் இடையூறுகளை ஏற்படுத்துவதாக அமைந்து விடக் கூடாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான கட்டளை தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் தங்களது சுயலாப பாசாங்கு அரசியலுக்காக வடக்கின் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் ஆடிக் கொண்டு வந்திருந்த கூத்தாட்டங்கள் காரணமாக அதிருப்தி கொண்ட நிலையில், பாதுகாப்புத் தரப்பினர் அந்த அதிருப்தியினை தங்கள் மீது காட்டுவதாகவே எமது மக்கள் அங்கலாய்த்து வருவதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, இது குறித்து அரசு அவதானத்தில் எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

மக்கள் பாதுகாப்பு என்ற பெயரில், தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளை காட்டக் கூடிய சந்தர்ப்பமாக இன்றைய சூழ்நிலையை எவரும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதில் அரசாங்கம் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அதேநேரம், அப்பாவி மக்கள் எவராயினும் அம் மக்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்படக் கூடாது என்பதையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

குறிப்பாக, முஸ்லிம் மக்களில் பலரும், பல்வேறு பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்டு வருவதாகவே அன்றாட ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன. இத்தகைய கைதுகளின்போது, பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பில்லாத அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டிருந்தால், அவர்களிடம் மேற்கொள்கின்ற விசாரணைகளின் பின்னர் அவர்கள் அப்பாவிகள் எனத் தெரியவரும் நிலையில் அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அதேநேரம், அத்தகைய அப்பாவிகளை கைது செய்வதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், கடந்த தற்கொலைத் தாக்குதலுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் சிங்கள மக்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றே தெரிய வருகின்றது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அப்பாவிகளும் அடங்குகின்றனர் என பலதரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பிலும் அவதானமெடுத்து, உண்மையிலேயே வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்பில்லாதவர்களை விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.(ம-3)

# அவசரகால சட்டத்தால் தமிழ் மக்களுக்கே அதிகம் பாதிப்பு

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தினால் நாமும் தமிழ் மக்களுமே பல்வேறு பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.



தமிழர்களின் காணிகள் இன்னமும் இராணுவத்தினர் வசம் உள்ளன. தமிழர்கள் பலர் சிறையில் வாடுகின்றனர். ஞானசார தேரர் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளபோதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் உள்ளனர். முன்னாள் போராளிகள் தமது குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கான நல்லெண்ணத்தை ஏன் அரசாங்கத்தினால் வெளியிட முடியாதுள்ளது.

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசத்தில் அமைந்திருந்த சிவன் கோவில் ஏற்கனவே அகற்றப்பட்டிருந்த நிலையில் தற்பொழுது அங்கிருந்த பிள்ளையார் கோவிலும் அகற்றப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்துக்கு வாக்களித்துவிட்டு சொந்தக் காசில் சூனியம் வைத்தவர்களாக நாம் மாறியுள்ளோம். அந்தளவுக்கு சோதனைகளும், கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

# பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார் தெரேசா மே

(லண்டன்)

பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே எதிர்வரும் 7 ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பான உடன்படிக்கை குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தில் தெரேசா மே ஆல் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டிருந்தன.



இந்த நிலையிலேயே தெரேசா மே நேற்றைய தினம் தனது பதவி விலகும் முடிவை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### மெகா பவர்

திகதி 24/05/2019
சீட்டிழுப்பு இலக்கம் 3184
P 08 08 22 46 58

### மஹஜன சம்பத

திகதி 2019/05/24
சீட்டிழுப்பு இலக்கம் 3923
M 6 6 4 4 7 2

### தன நிதானய

திகதி 2019-05-24
சீட்டிழுப்பு இலக்கம் 152
S 33 37 54 77

### கொவிசெத

திகதி 2019.05.24
சீட்டிழுப்பு இலக்கம் 2127
J 10 37 55 73

## பொலிஸ்மா அதி...

ருத்த ஜயசிங்கவுக்கு எதிராக குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வித்தியா கொலை வழக்கில் முக்கிய குற் றவாளிக்கு உதவியதாக சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நேற்று வெள் ளிக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

2015 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புண ர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 7 எதிரிகளுக்கு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாய நீதிமன்றம் மரண தண்டனை வழ ங்கித் தீர்ப்பளித்துள்ளது.

தண்டனை பெற்றவர்களில் இவ் வன்பு ணர்வுக் கொலையின் சூத்திரதாரியாகிய சுவிஸ் குமார் எனப்படும் மகாலிங்கம் சசிக் குமார் தப்பிச்செல்ல உதவியதாகக் கூறப்படும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுரு த்த ஜயசிங்கவுக்கு எதிராகவே குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அவசரகால சட்ட...

வாக்குகளினால் பெரும்பான்மை பெற் றுள்ளது.

இதனால் அடுத்தமாதம் வரை அவசர கால சட்டத்தை நீடிப்பதற்கு பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை ஏகமனதாக அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் அளிக் கப்பட்டன.

இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி கலந்து கொள்ளவில்லை என்பதுடன் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஆவா குழு முழு...

செல்லவுள்ளார்.

இந்த நிலையில், காங்கேசன்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடத் திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இத னைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருட காலம் தான் வடக்கில் சேவையாற்றியதாகவும், தற்போது அங்கு அனைத்து பிரச்சினைகளும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அமைதி நிலவுவதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆவா குழு முழு மையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால், ஆவா குழு தொடர்பான பிரச் சினை தற்போது அங்கு இருக்காது என விடைபெற்றுச் செல்லும் வட மாகாணத்திற் குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார். (ம-3)

## தாக்குதலுடன்...

கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறி யுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங் கரவாத தடுப்பு பிரிவினரின் பொறுப்பில் உள்ள சில சந்தேகநபர்களின் வங்கிக் கணக்கு களாக இவை அடையாளம் காணப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வங்கிக் கணக்குகளில் 134 மில் லியன் ரூபாய் பணம் வைப்பிலிருப்பது தெரி யவந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் 14 மில்லியன் ரூபாய் பெறுமதி யான சந்தேகநபர்களின் சொத்துக்கள் கண் டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார். அத்தோடு 7 பில்லியன் ரூபாய் பெறு மதியான சொத்துக்கள் தொடர்பில் விசார ணைகள் இடம்பெற்றுவருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறி யுள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பு டைய பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு அவர்களின் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தோடு, அவர்களின் சொத்து விபரங்களும் ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-3)

## காணிகள் இருந்...

இல்லாத நிலைமையில் வாழ்ந்து வருவ தாக யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் வீடுகளின் தேவை அதிகமாக உள்ளது. அதில் மீள் குடியேறிய மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அமைத்து கொடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அவர்களுக்கு தற்போது 10 இலட்ச ரூபாய் வீட்டு திட்டங்கள் வழங்கப்பட்டு வரு கின்றன.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 4ஆயிரத்து 693 பேருக்கு வீடுகள் தேவை யாக உள்ளன. யாழ்.மாவட்ட பிரதேச செயல கங்களிற்குள் அதிகூடிய தேவை உடைய தொகை இதுவாகும். அதேவேளை நெடுந் தீவு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 113 பேருக்கு வீடுகள் தேவையாக உள்ளன. இது குறைந்தளவு தொகையாகும்.

நிதி மூலங்கள் கிடைக்கும் பட்சத்தில் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கும் பணிகளை முன்னெடுக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் வீடுகள், காணிகள் இல்லாமல் அதிகளவானோர் வாழ்கின்ற னர். அதில் காணிகள் இருந்தும் வீடுகள் இல் லாதோர் தொகை அதிகமாக உள்ளது என தெரிவித்துள்ளார். (ம-3)

## பலாலி விமான...

பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

முதற்கட்டப் பணிகளின் கீழ் விமான பயண சீட்டுக்கான கட்டணம் வருடம் முழுவ தும் நிவாரண முறையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இரத்மலான விமான நிலையத்தில் இரு ந்து உள்நாட்டு விமான சேவைகள் ஆரம்பிக் கப்பட்டு மத்தள, மட்டக்களப்பு, சீகிரிய, பலாலி ஊடாக கட்டுநாயக்க அல்லது இரத்மலான விமான நிலையம் வரை உள்ளக சேவை கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் அசோக அபேசிங்க மேலும் தெரிவித்தார். (ம-3)

## ஆட்சியாளர்களி...

சேதங்களை விளைவித்தேனும் அதிகா ரத்தை கைப்பற்ற முயற்சித்து வருவதாகவும், எதிர்வரும் தேர்தல்களில் தெரிவாகும் ஜனா திபதியும் பிரதமரும் யார் என்ற அரசியல் சூதாட்டம் நாட்டில் இடம்பெறுவது நாட்டுக்கு பெரும் பாதிப்பாகும் என அவர் குறிப்பிட்டார்.

கண்டி குண்டசாலை கோணவெல தெற்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இசுரு உயன்புர எழுச்சிக் கிராமத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அனைவருக்கும் நிழல் எழுச்சிக்கிராமம் வேலைத்திட்டத்தின் கீழ் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள 263ஆவது மாதிரிக் கிராமம் இதுவாகும். இது 27 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதியாகும். இதற்காக 511 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## புனர்...

வில் ஈடுபடமாட் டார்கள் என தான் கூறுவதாக புனர்வா ழ்வு ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-4239)
மானிப்பாய் 0768226240 V2 TRAVELS
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி
நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

விற்பனைக்கு
Lion பொமெரியன் நாய்க்குட்டி கள் விற்பனைக்கு உண்டு.
0719637236
(8893)

31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 22 . 06 . 1946



இறப்பு 25 . 04 . 2019

25.04.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்

அமரர் விக்கினேஸ்வரி வாசேஸ்பதிராஜா

எங்கள் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆருயிர் அன்னையே
அவனியில் அரவணைப்பு இன்றித் தவிக்கின்றோம்!
நீர்தந்த அன்பின் நிழலில்
என்றும் உம நினைவுடன்
தொடரும் எம வாழ்க்கை...



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.05.2019) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.34/1, தாமரை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(8918)

- குடும்பத்தினர்
வா.கணேஸ்வரன் 0776669987
வா.லோகேஸ்வரன் 0779590065

கணினி தொழிற்பயிற்சி (with payments)
வேலைவாய்ப்புடன் கூடிய கணினிப் பயிற்சியில் 1.Free Course, 2.Computer Class, 3. Computer Training ஆகிய பிரிவுகளாக ஆரம்பிக்கப்படுகின்றன. (Programming, Web Developement, Hardware, Marketing, Data Entry, IT Basic...)
MICRODGITEL
தொடர்பு: 076 300 5506

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சுவதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

CHEMISTRY
K.Subeesan
2020 - Organic
ஆரம்பம்: 25.05.2019
2019 & Repeat : 2011 - 2018
கடந்த கால விளக்கம்
ஆரம்பம்: 28.05.2019
Physical ஆரம்பம்: 27.05.2019 (மாலை)
THE SCIENCE CORNER
தொடர்புகளுக்கு: 077 430 7829

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.